பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 11 சனிக்கிழமை (26.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 365

★ பழைய சமாதான நடவடிக்கை கிடையாது; இனிப் புதிய ஆரம்பம்

★ யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தியமைக்கப்படும்

★ தாயகம் - சுயநிர்ணயம் என்பவையெல்லாம் இல்லை

★ இரு தரப்புக்குப் பதிலாகப் பலதரப்புப் பேச்சு

★ ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் தீர்வு

★ இறுதித்தீர்வின் அங்கமாகவே இடைக்கால ஏற்பாடு

# ஜனாதிபதி மஹிந்த கடும் நிலைப்பாடு

## பேரினவாத மேலாதிக்கத்தைப் பிரதிபலிக்கும் அவரது கொள்கை விளக்கப் பிரகடனம்

கொழும்பு, நவம்பர்.26

**புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசின் கொள்கை விளக்கப் பிரகடனத்தை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். அது பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்கப் போக்கை முற்று முழுதாகப் பிரதி பலிப்பதாய் அமைந்திருந்தது.**

**கடும் நிலைப்பாட்டுடன் கூடிய அவரது கொள்கை விளக்கப் பிரகடனம் அமைதிப் பேச்சுக்கான - சமாதான முயற்சிகளுக்கான - வாய்ப்பு எதிர்காலத்தில் அருகி வருவதை உறுதிப்படுத்துவதுபோல அமைந்தது.**

"கொழுந்துவிட்டெரியும் இனப் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக ஒருமித்த இலங்கைக்குள் பரந்துபட்ட அதிகாரப்பரவலாக்கலுடன் கூடிய புதிய சமாதான முயற்சிகளைப் புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலை மேலும் நீடிப்பு

அவசரகாலச் சட்டம் மீண்டும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் ஐ.தே.கட்சி ஆதரவுடன் நேற்று நாடாளுமன்றத்தில் 69 மேலதிக வாக்குகளினால் நிறைவேறியது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரேரணைமீதான விவாதம் நேற்று பிற்பகல் 12.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. அரசுடன் சேர்த்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய, நுஆ ஆகிய கட்சிகள். பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான மகேஸ்வரன், மலையக மக்கள் முன்னணி உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேஷன் ஆகியோர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தனர்.

ஸ்ரீல.மு. காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்தது. இ.தொ.கா. உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை.

வாக்கெடுப்பின்போது ஆதரவாக 84 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் பெற்ற நிலையில் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை 69 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. (ஓ-க)

# மாவீரர் தினம் நாளை அனுஷ்டிப்பு

கொழும்பு, நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் உயிர் நீத்த புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கத்துடன் புலிகள் ஆண்டுதோறும் மாவீரர் வாரத்தை அனுஷ்டித்து வருகின்றனர். புலிகள் இயக்கத்தில் முதலாவதாக உயிர்நீத்த லெப்டினன்ட் சங்கர் 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாலை 6.05மணிக்கு மரணமடைந்தார். இதனை நினைவுகூரும் வகையில் நாளை மாலை 6.35 மணிக்கு (புதிய நேரப்படி) மாவீரர் துயிலும் இல்லங்களிலும், ஏனைய பொது இடங்களிலும் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மணி ஒலிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.

இதற்கமை[illegible] தமிழர் தாயகப் பிரதேசம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன.

மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் தமது உறவுகளான மாவீரர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்குச் சென்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய சின்னங்கள் விடுதலைப் புலிகளால் நேற்றுப் பிரகடனம்

கிளிநொச்சி,நவ.26

தமிழீழத் தேசிய சின்னங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று அதிகாரபூர்வமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

தமிழீழத் தேசிய மலராக கார்த்திகைப் பூவும், தேசிய விலங்காக சிறுத்தையும், தேசியப் பறவையாக செண்பகமும், தேசிய மரமாக வாகையும் அறிவிக்கப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களத் தேசியத்தின் ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியத்தின் சார்பில் வாழ்த்து

### நேற்று நாடாளுமன்றத்தில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் இரண்டு ஆட்சிகளும், இரண்டு அரசுகளும் இயங்குகின்றன என்பதை ஊர்ஜிதப்படுத்திவிட்டது. இந்தவேளையில் சிங்களத் தேசியத்தின் ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இப்படி நாடாளுமன்றத்தில் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட் நாடாளுமன்றஉறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்

நேற்று நாடாளுமன்றத்தில் அவசர காலச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகளை தேசியத் தலைவர் ஆரம்பித்துவைத்தார்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வை நேற்று ஆரம்பித்துவைத்தார்.

சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் இடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.29 மணிக்கு (பழைய நேரம் 7.59 மணி) தமிழீழத் தேசியத் தலைவர் பொதுச்சுடரினை ஏற்றியபின் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து ஈகச் சுடரேற்றப்பட்டு மாவீரரின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தளபதிகள்,பொறுப்பாளர்கள், போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - தாயகமெங்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர் மண்டபங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள், பணிமனைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பொது இடங்கள் என்பவற்றில் பொதுச்சுடரேற்றப்பட்டு மாவீரர் எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகின. (ஓ-12)

## மின்சாரம் தாக்கி ஒருவர் படுகாயம்!

உரும்பிராய்,நவ.26

மாவீரர் தினத்தை முன்னிட்டு அலங்கரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் மின்சாரம் தாக்கிப் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 7.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான துரைராசா சிவகுமார் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ட்ரக் மீதான கிரனேட் வீச்சில் காயமடைந்த சிப்பாய் நேற்று உயிரிழப்பு!

பருத்தித்துறை, சாரையடி, மருதடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இராணுவ ட்ரக் மீது இலக்குவைத்து இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.


யாழ்ப்பாணம் பருத்தித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த ருவான் வர்ணப்பிரிய (வயது-20) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

இராணுவத்தினர் பயணம் செய்துகொண்டிருந்த ட்ரக் மீது இனந்தெரியாதவர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதில் இராணுவத்தினர் ஐவர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் மிகப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும், சிகிச்சை எதுவும் பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (க-12-13-203)



வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வின் போது கடற்புலிகளின் துணைப்படை இரண்டாவது பிரிவின் அணிவகுப்பு இடம்பெற்றது. கடற்கரை வீதியில் அணிவகுப்பு இடம்பெறுவதை முதலிரு படங்களிலும் வியாபாரி மூலையில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுப் பந்தல் முன்பாக அணிவகுப்பு மரியாதை இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- சுந்தரலிங்கம்)*

# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

மாவீரர் தினத்தையொட்டி மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நடைபெற்றுவருகின்றன.

தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பி.ப. 4 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் பரமேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ம.இளம்பிறையன், வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ.சாம்பசிவம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாவீரர்களின் நினைவாக அவர்களது பெற்றோருக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஒ-8-13)

* * *

தென்மராட்சி,நவ.26

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மாவீரர்களின் பெற்றோருக்கு தென்னங்கன்றுகளை வழங்கினர்.

நேற்று சங்க மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் வைத்து தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

சங்கத்தலைவர் கு.ந.பாலச்சந்திரன், சாவகச்சேரி வணிகர் சங்கத் தலைவர் வீ.வீ. மகாலிங்கம் ஆகியோர் தென்னங்கன்றுகளை வழங்கினர். (ஒ-31-117)

* * *

வடமராட்சி கிழக்கு,நவ.26

வடமராட்சி கிழக்கில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நேற்று வத்திராயன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி வா.கலாத்தானும் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலித் தளபதி ஆண்டானும் ஏற்றினர்.

முதல் மாவீரரான லெப்.சங்கரின் திருவுருவப் படத்திற்கான சுடரை மூன்று மாவீரர்களின் தாயாரான முத்துகுமாரு மனோன்மணி ஏற்றினார். வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் லெப். சங்கரின் படத்துக்கு மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்ட மாவீரர்களின் படங்களுக்கு பெற்றோர்கள், உரித்துடையோர்கள் ஈகச்சுடரினை ஏற்றி மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகள் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாச மேலாளர் கங்கை அழகன் தலைமையில் நடைபெற்றன. (ஒ-182)

* * *

குருநகர்,நவ.26

யாழ். நகர கடற்றொழிலாளர் சமாச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தமிழீழ மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று குருநகர் சனசமூக நிலையத்தின் கலியாண மண்டபத்தில் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களாலும் குருநகர் பொது அமைப்புகளாலும் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பிரதான வீதியில் இருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் பாண்ட் வாத்திய சகிதம் குருநகர் 6ஆம் குறுக்கு வீதியூடாக அழைத்து வரப்பட்டார்கள். குருநகர் சனசமூக நிலைய கலியாண மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பொதுச்சுடரினை வீர வேங்கை யோகமலரின் தாயார் கிறேசியன் சின்னக்கிளியும் தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் லெப்ரினன்ட் கிர்மானியின் தந்தை சிலுவைராசாவும் ஏற்றினர். இதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து மாவீரர் லெப்ரினன்ட் சோழன், வீரவேங்கை ஆனந்தராஜ் ஆகியோரின் தாயார் பெர்னாண்டோ லூர்த்தம்மா ஈகச்சுடரை ஏற்றினார்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சின்னையா தவரட்ணம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (ஒ-51-14)

* * *

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கூட்டுறவுச்சபையின் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரேற்றல், அகவணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமானது. அரங்கில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர் சுடர் ஏற்றி மாலை அணிவித்தனர்.

பின்னர் சிறப்புரைகள் இடம்பெற்று மாவீரரின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-13)

* * *

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தால் நடத்தப்பட்ட மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை தீவக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் த.சத்தியதாசனும் ஈகச்சுடரை மாவீரர்களின் பெற்றோரும் ஏற்றினர்.

தீவக எழுச்சிப் பேரவைச் செயலாளர் த.சத்தியதாசன் சிறப்புரை நிகழ்த்தினார்.

மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

* * *

வலி.வடக்கு,நவ.26

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையமும் வாழ்வகமும் இணைந்து நடத்தும் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்கு இதன் போது உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினர் நடத்தும் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாயில் உள்ள சங்கத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 5 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தினர் அப்பகுதியில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கவுள்ளனர். (ஒ-86)

# தலைவர் பிரபா பிறந்தநாள் நிகழ்வுகள்

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 51ஆவது பிறந்த நாளான இன்று குடாநாட்டில் பல்வேறு சமூக மேம்பாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்று நள்ளிரவு 12 மணிக்குப் பின் - இன்று - அதிகாலை பிறக்கும் முதல் குழந்தைகளுக்கு கிராமிய சிக்கனக் கடனுதவிச் சங்கத்தினால் ஒருதொகைப் பணம் வங்கிக் கணக்கில் இடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்திகை மற்றும் வல்வெட்டித்துறை வைத்தியசாலைகளில் இன்று பிறக்கும் முதலிரு குழந்தைகளுக்கும் தலா 2ஆயிரம் ரூபாவை வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என்று ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

* * *

தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்க்கு சர்வதேச லயன்ஸ் கழக 306பி, மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார்.

* * *

தேசியத் தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு பரந்தன் கனகராயன் குளப் பிரதேசத்திலுள்ள 26 மாவீரர் குடும்பங்களுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்படவுள்ளன.

லண்டன் ஆரோபணம் சிறுவர் நிதியத்தினதும், அமெரிக்க ரெக்கினதும் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் இந்த மின்கலங்களை வழங்கவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கனகராயன் குள மாதிரி வீடமைப்புத் திட்டத்தில் நடைபெறும். (ஒ-31-117-173-204-352)

# ஆனையிறவில் நாளை கலை நிகழ்வுகள்

கிளிநொச்சி,நவ.26

ஆனையிறவு மாவீரர் நினைவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை அரங்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 9 மணிமுதல் 12 மணிவரையும், பிற்பகல் 2 மணிமுதல் பிற்கல் 4.30 மணிவரையும், பின்னர் பிற்பகல் 5 மணிமுதல் இரவு 11 மணிவரையும் அரங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நினைவாலய உள்ளரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் இசைக்கச்சேரி, நாடகங்கள், கவியரங்கு, வில்லிசை ஆகியவை இடம்பெறவுள்ளன. (ஒ)

# கண்காணிப்புக்குழு அதிகாரி இளம்பரிதியுடன் சந்திப்பு

பளை,நவ.26

யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜோண் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை பளையில் உள்ள அரசியல்துறை செயலகத்தில் நேற்று மு.ப. 10.30 மணிக்கு சந்தித்தார்.

அப்போது மக்களது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் குழப்பம் ஏற்படுத்தத் திட்டமிட்டே சில நாசகார சக்திகள் அசம்பாவிதங்களைத் தோற்றுவிப்பதாகக் கண்காணிப்புக்குழுவினரிடம் இளம்பரிதி சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களால் முன்னெடுக்கப்படும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இயல்பாக புனிதமான உணர்வெழுச்சியுடன் நடைபெறுவதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஒத்துழைப்பையும் இளம்பரிதி இச்சந்திப்பின்போது கோரினார்.

மாவீரர் நாள் நிகழ்வுகள் சுமுகமாகவும், அமைதியாகவும் இடம்பெறுவதற்கு தமது ஒத்துழைப்பு உண்டு என்றும் -

யாழ் மாவட்ட படைத்தரப்பின் தளபதியும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவார் என்று தமக்கு உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் -

நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களில், தெருக்களில் தமது கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

கண்காணிப்புக்குழு அதிகாரி யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் தெரிவித்தார் என அரசியல்துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-190)

# வடமராட்சியில் மீட்கப்பட்ட தமிழக மீனவர் நாடு திரும்பினர்

படகு இயந்திரம் பழுதடைந்ததால் கடலில் தவித்து, பின்னர் வடமராட்சிக் கடற்றொழிலாளர்களால் காப்பாற்றப்பட்ட தமிழக மீனவர்கள் மூவரும் நேற்றுக்காலை இன்பருட்டி கடற்கரையிலிருந்து அவர்களது படகில் தமிழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் காப்பாற்றப்பட்ட தமிழ்நாடு நாகபட்டினம் அம்பே நகரைச் சேர்ந்த இடும்பன் தண்டாயுதம் (வயது 45), முத்தையா முத்துச்சாமி (வயது 46), குப்புசாமி பழனியாண்டி (வயது 30) ஆகிய மூவரும் கடந்த நான்கு தினங்களாக இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினருடன் தங்கியிருந்தனர். மேற்படி சங்கத்தினர் தமிழக மீனவர்களின் படகின் பழுதை நீக்கி அதற்குத் தேவையான எரிபொருளையும் வழங்கினர். தம்மை நல்ல முறையில் அனுசரித்து, சகல உதவிகளையும் வழங்கிய இன்பருட்டி மீனவர்களுக்கு தமிழக மீனவர்கள் நன்றி தெரிவித்தனர். (ஒ-173)

# காசநோய் பரிசோதனை சேவை

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ். மாவட்ட காசநோய் தடுப்புப் பிரிவினரால் காசநோய்க்கான நடமாடும் பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைத்தியசேவை காலை 8.30 மணிமுதல் பி.ப. 4 மணிவரை தொடர்ந்து மூன்று தினங்களுக்கு வெவ்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது.

இன்று குருநகர் மற்றும் திருநகர்ப் பகுதிகளிலும், நாளை பண்டத்தரிப்புப் பகுதியிலும், நாளைமறுதினம் கைதடிப் பகுதியிலும் இப்பரிசோதனை இடம்பெறவுள்ளதாகவும் -

3 கிழமைக்குமேல் சளியினால் பீடிக்கப்பட்டவர்கள் காசநோய்ப் பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும் எனவும் -

வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா தெரிவித்தார். (ஒ-12)

# தேர்தல் கடமையில் பங்கேற்காத அரசு ஊழியர் விளக்கம் தரப்பணிப்பு

கடந்த ஜனாதிபதித் தேர்தல் கடமைகள் தொடர்பான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளத் தவறிய அரச உத்தியோகத்தர்களிடமிருந்து யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் விளக்கம் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கருத்துத் தெரிவிக்கையில்:-

தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி ஒன்று இடம்பெற்றது. இப்பயிற்சிக்கு அழைக்கப்பட்டவர்களில் பலரும் கலந்துகொள்ளவில்லை.

அவர்கள் கலந்துகொள்ளாமைக்கான விளக்கத்தை தெரிவத்தாட்சி அலுவலர் கோரியிருந்தார்.

இதற்கு பெரும்பாலானவர்கள் சுகவீனத்தையே காரணமாகக் காட்டியுள்ளனர். இதில் குறிப்பிடக்கூடியது குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் 15 ஆசிரியர்கள் சுகவீனத்தைக் காரணமாகக் காட்டியுள்ளனர்.

தேர்தல் தினத்தன்று தேர்தல் கடமைக்கு சமூகமளிக்காத அரச உத்தியோகத்தர்களிடமும் விளக்கம் கோரப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது இவ்வாறு அவர்தெரிவித்தார். (ஒ-202)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


# பேச்சு என்ற பேச்சுக்கூட இனி இல்லை என்பதே நிலை

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அமைதித் தீர்வு காண்பதற்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் தகர்ந்து போய்விட்டது.

நேற்று நாடாளுமன்ற அமர்வை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய - தமது அரசின் - கொள்கை விளக்க உரை, அமைதி முயற்சிகளுக்கு மிச்சசொச்சம் இருந்த வாய்ப்பையும் ஆப்பு வைத்து அடியோடு தகர்த்து விட்டது.

சமாதான முயற்சிகளுக்கு முற்றாகக் கதவை மூடும் விதத்தில் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த கருத்துகளும், செய்துகொண்ட ஒப்பந்தங்களும் சிங்கள, பௌத்த பேரினவாத உணர்வைத் தட்டி எழுப்பி வாக்குகளைச் சுருட்டும் தந்திரமாக இருக்கலாம் என்றும்-

ஆட்சிக்கு வந்ததும் அவர் நியாயப்போக்கோடு நடந்துகொள்வார் என்றும்-

தெற்கில் பலர் எதிர்பார்த்தனர். ஆனால், தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் ஒரே நிலைப்பாட்டைத்தான் - பேரினவாத முகத்தைத்தான் - தாம் கொண்டுள்ளார் என்பதை இப்போது நிரூபித்திருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

தேர்தல் காலத்தில் தாம் முன்வைத்த 'மஹிந்த சிந்தனை'யை மீண்டும் 'அமைதி முயற்சிக்கான நிந்தனை'யாக தமது நேற்றைய கொள்கையின் விளக்கவுரையில் அலங்கரித்திருக்கின்றார் தென்னிலங்கை புதிய தலைவர்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக தமிழர் தரப்பின் - புலிகள் தரப்பின்- நிலைப்பாட்டுக்கு நூற்றுக்கு நூறு வீதம் முரணான நிலைப்பாட்டை எடுத்து ஜனாதிபதி மஹிந்த அறிவித்திருப்பதைப் பார்க்கும்போது சமாதானப் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தெளிவாகியிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்தவின் கொள்கை விளக்க உரையில் உள்ள முக்கிய அம்சங்கள் இவை:-

* யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தியமைக்கப்படும்.
* இருதரப்புப் பேச்சுக்குப் பதிலாக பல தரப்பின் பங்குபற்றலோடு சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்படும்.
* ஒற்றையாட்சிக் கூட்டமைப்புக்குள்தான் எந்தத் தீர்வும் காணப்படும்.
* நாட்டுக்குள் எந்த இனத்துக்கும் தனித் தாயகம் என்ற எண்ணக்கருத்துக்கு இடமேயில்லை.
* அதேபோன்று எந்த இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை என்று கருதுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.
* இடைக்காலத் தீர்வு குறித்துப்பேசலாம். ஆனால், அது இறுதி தீர்வின் அங்கமாகவே இருக்கவேண்டும்.

- இப்படியெல்லாம் அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆக, இதுவரை இடம்பெற்ற அமைதி முயற்சிகளின் பெறுபேறுகள் அடியோடு நிராகரிக்கப்பட்டுவிட்டன.

அமைதி முயற்சிகளுக்கு தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட அடிப்படை அம்சங்கள் அனைத்தும் புறம் ஒதுக்கப்பட்டுவிட்டன.

பேரினவாதம் தான் நினைத்ததைத் தமிழர் மீது விதிக்க - திணிக்க - துணிந்துவிட்ட நிலையில், அமைதி முயற்சிகள் இனிமேல் அர்த்தமற்றவையாகப் போகின்றன.

மேலாண்மைவாதத்தின் கைப்பொம்மையாகியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்பார்ச் ப்பட்டபடி பேரினவாதத்தின் குரலாக - அட்சரம் பிசகாமல் - ஒலித்திருக்கின்றார்.

ஏற்கனவே காணப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டை இலங்கை அரசுத் தரப்பு செம்மையாக நடைமுறைப்படுத்தவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசுப் படைகள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் தமிழர் தாயகத்தை அந்த மண்ணுக்குரிய மக்களிடம் மீள ஒப்படைப்பது வரை இந்த ஒப்பந்தத்தின் கீழ் தனக்குள்ள பல கடப்பாடுகளை அதற்குரிய காலம் கடந்தும் அரசுத் தரப்பு நிறைவுசெய்யவில்லை. இருக்கும் உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று புலிகள் வற்புறுத்த அதைச் செய்ய மறுக்கும் அரசு, தனக்கு ஏற்றவிதத்தில் உடன்பாட்டை திருத்தப்போவதாக ஒருதலைப்பட்சமாக அறிவிக்கின்றது.

தமிழர்களின் அதிகாரபூர்வ - ஏக - பிரதிநிதிகளான புலிகளுடன் மட்டுமே நேரடிப் பேச்சு என்று முன்னைய அரசுடன் இணக்கம் கண்டே அமைதி முயற்சிகளுக்குப் புலிகள் சம்மதித்தனர். அந்த முடிவைத் தன்பாட்டில் தூக்கிக் கடாசி, பல தரப்பு பேச்சு என்கிறார் அரசின் புதிய தலைவர்.

ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்தான் தீர்வு என்பதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வுக்கான வாய்ப்பை அடியோடு அடித்து மூடிவிட்டார் ஜனாதிபதி மஹிந்த.

சிங்கள, பௌத்த பேரினவாத சகதிக்குள் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒருபோதும் புரிந்து கொள்ளப் போவதில்லை என்று கடந்த வருட மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக் கூட தென்னிலங்கைத் தலைமை அங்கீகரிக்கத் தயாரில்லை எனத் திட்டவட்டமாக அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் குறிப்பிட்டுக் காட்டியதுபோல-

வடக்கு - கிழக்கு மாநிலமானது தமிழ்ப் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ, தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ சிங்களத் தலைமைகள் ஏற்றுக்கொள்ளாதென்பதை ஜனாதிபதி மஹிந்தவும் இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

அதேபோல் இடைக்கால நிர்வாக விடயத்தை இறுதித் தீர்வின் ஓர் அங்கமாகவே பேசவேண்டும் என முன்னர் பிடிவாதமாக நின்றவர் ஜனாதிபதி சந்திரிகா. அதனால்தான் அந்த விடயம் குறித்துக் கூட அவருடன் ஒரு பேச்சு முயற்சிக்குப் புலிகள் செல்லவில்லை.

அதே பிடிவாதத்தை - தனது கூட்டமைப்பில் உள்ள பௌத்த, சிங்களத் தீவிரவாதிகளை மடக்கிப் போடுவதற்காகத் தாமும் கையில் பிடித்திருக்கின்றார் சந்திரிகாவைத் தொடர்ந்து வந்த ஜனாதிபதி ராஜபக்ஷ.

ஒட்டுமொத்தத்தில் அமைதி முயற்சிகளுக்கு இனி வாய்ப்பே இல்லை என்று அடித்துக் கூறும் விதத்தில் சமாதானப் பாதைக்கான கதவை இறுக்கச் சாத்தித் தாழ்ப்பாள் போட வைத்திருக்கின்றது புதிய ஜனாதிபதியின் கொள்கை விளக்கப் பேருரை.

# தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்க தடை எதுவும் விதிக்கப்படவில்லை!

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் கூட்டமைப்பினர் விளக்கம்

கொழும்பு, நவ.26

வடக்கு - கிழக்கு மக்களை வாக்களிக்க வேண்டாம் என எத்தகைய அச்சுறுத்தல்களையும் விடுதலைப் புலிகளோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ விடுக்கவில்லை. அவர்கள் தேர்தலில் வாக்களிப்பதைத் தடுக்கவும் இல்லை. அவர்கள் சுதந்திரமாக முடிவெடுத்துச் செயற்பட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக்குழுவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் மக்களை அச்சுறுத்தி வாக்களிக்கத் தடுத்ததாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் சட்ட மற்றும் தேர்தல் ஆலோசகர் இயோனோ அரங்கேற்றோவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்புத் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டை மறுத்த கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்புக் குறித்து வடக்கு - கிழக்கு மக்களுக்கு கூட்டமைப்பினாலோ விடுதலைப் புலிகளாலோ எத்தகைய அச்சுறுத்தல்களும் விடுக்கப்படவில்லை. அதேவேளை - எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி நாங்கள் கோரவில்லை.

தேர்தலில் போட்டியிட்ட பிரதான இரு வேட்பாளர்களிலும் நம்பிக்கை இழந்த நிலையில் மக்கள் சுதந்திரமாக முடிவு செய்து தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

இராணுவமும், ஆயுதக் குழுக்களும் இணைந்து முறைகேடான வாக்களிப்பை நடத்த முயற்சிக்கிறார்கள் என வெளியான செய்திகளால் மக்கள் அச்சம் கொண்டிருந்தனர். இதன் விளைவே அவர்கள் தேர்தலைப் புறக்கணித்தனர்.

தேர்தல் வாக்களிப்பில் வன்செயல்கள் இடம்பெறவில்லை. மக்கள் சுதந்திரமாக முடிவு எடுத்த நிலையில் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப்படுவது பிழையானது. தேர்தல் புறக்கணிப்பின் ஊடாக மக்கள் சர்வதேசத்துக்குச் செய்தி ஒன்றை விடுத்துள்ளனர். தமது தாயகத்தில் சுயநிர்ணய அடிப்படையில் நடைமுறை அரசு ஒன்றுக்கு அங்கீகாரம் வழங்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். அதை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் எடுக்க வேண்டும் - என்று தெரிவித்தனர். (எ-3)

# தனது நிகழ்ச்சித் திட்டம் தவறானதா என்பதை காலம் விரைவில் தீர்மானிக்கும் என்கிறார் ரணில்

கொழும்பு, நவ.26

"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 47 லட்சம் மக்கள் எனக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். இதே போல் பல்லாயிரக்கணக்கானோர் எனக்கு வாக்களிக்க விரும்பியும் அவர்களால் வாக்களிக்க முடியாமல் போய் விட்டது. இந்த இரு சாராருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"அதேவேளை, நாட்டு மக்களின் நலன் கருதி நான் முன்வைத்த மக்கள் நிகழ்ச்சித்திட்டம் சரியானதா? அல்லது தவறானதா? என்பதை எதிர்காலம் விரைவில் தீர்மானிக்கும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மக்கள் மாத்திரமல்லாமல் தெற்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாக்களிக்க முடியாமல் போய்விட்டது. வாக்காளர் பட்டியலிலிருந்து அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டமையால் அவர்களின் வாக்குரிமை பாதிக்கப்பட்டது எனவும் எதிர்க் கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதற்கான எனது அபிலாசைகள், எதிர்பார்ப்புகள், திட்டங்கள் என்பனவற்றை உங்கள் முன்வைத்தேன்.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள வாக்காளர்களும் தெற்கிலுள்ள பல்லாயிரக்கணக்கான வாக்காளர்களும் சுதந்திரமான முறையிலும், இடையூறுகளின்றியும் வாக்களிப்பது சாத்தியப்படவில்லை. வடக்கு - கிழக்கில் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், இடையூறுகள் காரணமாக மக்கள் வாக்களிக்க முடியவில்லை. தெற்கில் வாக்காளர் பட்டியலிலிருந்து பல வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதன் மூலம் அவர்கள் தமது வாக்குரிமையை இழந்தவர்களாக்கப்பட்டார்கள்.

எனவே, இத்தகைய ஒரு சூழ்நிலையில் வாக்களிப்பு நீதியாகவும், நியாயமாகவும் நடந்துள்ளது என்று எவ்வாறு கூறமுடியும்? அது நீதியாக நடக்கவில்லை என்பதை ஐரோப்பிய ஒன்றியமும், தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் விரைவில் வெளியிடவிருக்கும் தமது அறிக்கைகளில் ஊர்ஜிதம் செய்வார்கள்.

துரதிர்ஷ்டவசமான இத்தகைய அவலச் சூழ்நிலையில் எங்கள் மத்தியிலான பிளவுகளும், பிரிவுகளும் விசாலித்துக் கொண்டே செல்கின்றன. இந்த நிலையை நீடிக்க விட்டால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் காண்பது மிகமிகக் கடினமானதாக இருக்கும். அது மட்டுமல்லாது, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பை இதற்குப் பெறுவதும் மிகக் கஷ்டமாகவிருக்கும். எனவே, எமது எதிர்காலச் செயற்பாடுகளை நாங்கள் மிகவும் அவதானமாகவும் தெளிவான சிந்தனையோடும் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குச் சிறந்த வேலைத்திட்டங்களை நான் முன்வைத்தேன். யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் சமாதானச் சூழ்நிலைக்கு உற்சாகமும், உத்வேகமும் கொடுத்தேன்.

எனது 'மக்கள் நிகழ்ச்சித்திட்டத்தின்' மூலம் சமாதான முன்னெடுப்புகளை மட்டுமல்ல, மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிப்பதற்கான நிவாரணங்கள், மார்க்கங்கள் என்பவற்றையும் முன்வைத்திருந்தேன். எனது இந்தத்திட்டங்கள் நிறைவேற்றப்படுமிடத்து ஆசிய நாடுகள் மத்தியில் இலங்கையும் ஓர் ஆசிய சக்தியாக விளங்கும் எனவும் நான் எதிர்பார்த்தேன். ஆனால், எனது இந்த எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் பெரும்பான்மைப் பலத்துடனான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அது தடுக்கப்பட்டுவிட்டது.

எனவே, இவற்றையெல்லாம் கண்டு துவண்டு விடாது மக்கள் எமக்கு அளித்துள்ள ஆணைக்கு அமைய நாங்கள் எமது பணிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதுவே மக்கள் எமக்குத் தந்துள்ள பொறுப்பாகும் - என்று உள்ளது.

# சு.கவில் தனக்கு எதிரான உட்கட்சிச் சதியை முறியடிப்பதற்குத் தயாராகின்றார் சந்திரிகா

கொழும்பு, நவ.26

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமையிலி ருந்து தம்மை நீக்குவதற்கு உட்கட்சிச் சதியொன்று இடம் பெறுவதாகக் கருதுகிறார் அக்கட்சியின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க.

இதனை ஆராய்வதற்கும், அவ்வாறான சதியொன்று இருக்குமாயின் அதனை முறியடிப்பதற்குமாக கட்சியின் மத்திய குழுவை எதிர்வரும் திங்கட்கிழமை அவர் கூட்டவிருக்கிறாரெனத் தெரிவிக்கப் படுகிறது.

ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள சந்திரிகா குமாரதுங்க தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் மூலம் நாடாளுமன்றத்திற்குப் பிரவேசிப்பதற்கும் உத்தேசித்திருக்கிறார்.

மறுபுறம், ஜனாதிபதியாகத் தெரிவு செய் யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டு மெனக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதன் பின்னணியிலேயே கட்சியின் மத்திய குழுவைக் கூட்டித் தமது தலைமைத்துவத்தை உறுதி செய்வதற்குச் சந்திரிகா தீர் மானித்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சர்களின் சத்தியப்பிரமாண வைபவத்தின் பின்னர் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் முன்னாள் ஜனாதிபதியைச் சந்தித்து ஆசி பெற்றனர். இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் கட்சித் தலைவி சந்திரிகா கடும் அதிருப்தியை அவர்களிடம் காரசாரமாக வெளியிட்டார் எனத் தெரி விக்கப்படுகிறது

# அச்சுவேலிச் சந்தையில் மழையில் நனைந்தவாறு மரக்கறி விற்பனை

## வியாபாரிகளின் அவலம் இது

அச்சுவேலி, நவ.26

அச்சுவேலி பொதுச்சந்தையில் மொத்தமாக விளைபொருள்களை விற்பனை செய்யக் கொண்டுசெல்லும் உற்பத்தியாளர்கள் - விவசாயிகள் மழையில் நனைந்து சேறும் சகதியுமான வெளியிடத்தில் நின்றே விற்பனை செய்ய வேண்டியிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி, பொதுச்சந்தை பெருமளவில் மரக்கறி வகை, வாழைக்குலை மற்றும் கிழங்குவகை உள்ளிட்ட உணவுப் பொருள்களை மொத்தமாக விற்பனை செய்யப் பயன்படும் பிரதான சந்தையாக விளங்குகின்றது.

வருடந்தோறும் பல லட்சம் ரூபாவைச் சந்தைக் குத்தகையாகப் பெற்றுக் கொடுக்கும் இந்தப் பொதுச்சந்தையின் நிலை பரிதாபகரமாக உள்ளது என்றும் சந்தை வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை - சந்தையில் சில்லறை வியாபாரம் செய்பவர்கள் வியாபாரம் செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கட்டட வசதிகளே உள்ளன என்றும் -

மீன்சந்தை திறந்த மண்டபமாக இருப்பதால் சந்தை இல்லாத நேரங்களில் இந்த மண்டபம் கட்டாக்காலி நாய்களின் தங்குமிடமாகமாறுகின்றது என்றும் பலவிதமான நோய்களை உடைய கட்டாக்காலி நாய்கள் இந்த மண்டபத்தைத் தமது தங்குமிடமாகவும் கொள்கின்றன - என்றும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டது. (எ-11)


## நாளை

கார்த்திகை 12
ஞாயிற்றுக்கிழமை
27.11.2005
திதி: ஏகாதசி
முன்னிரவு 09.08 வரை
நட்சத்திரம்: அத்தம்
முன்னிரவு 09.09 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 09.12 - 10.42
ராகுகாலம்: 04.42 - 06.12
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தாய்நாட்டை நேசித்து சேவை செய்ய வேண்டும். பிறரின் தாய் நாட்டை வெறுக்கவோ, தாக்கவோ வேண்டாம்.

- பாபா.




(43210) (24-16-46)



## ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜோதிடம்

வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பாஸ்கர சுவாமிகள். இவர் ஜாதகம், கைரேகையூடாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர வீட்டு மனை பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்கால பலன்களை அறிந்திடுங்கள்.

★ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

**ஸ்ரீபாலாஜி இன்**

அறை எண் 102, 293, கஸ்தூரியார் வீதி,
(43296) யாழ்ப்பாணம். T.P.: 021 222 2341 (32-26-19-15)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி செ.பார்வதிதேவி
அவர்களின் அன்புத்தந்தை

**அமரர் குழந்தையர் செல்லத்துரை**

அவர்கள் 22.11.2005 இல் இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை மகாவித்தியாலயம்.

(43191)(42-26-15-19)




## நேரகாலத்தோடு இம்மாதக் கொடுப்பனவு

தென்மராட்சி,நவ.26

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், தொழு, காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் அடுத்த வாரம் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவினை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வழமையாக மாதத்தில் 15ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும்-

ஆண்டிறுதிக் கணக்குகள் முடிப்பதற்காக குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும்- பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.

(3-117)

## முன்பள்ளிக்கட்டம் இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

புலோலியில் 'கியூ மெடிக்கா' நிறுவனத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக்கட்டடம் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகத்திடம் இன்று காலை 9 மணிக்கு கையளிக்கப்படவுள்ளது.

புலோலி சதாவதானி கதிர்வேற்பிள்ளை சனசமூக நிலையத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடமே தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, 'கியூமெடிக்கா' நிறுவன திட்டப் பணிப்பாளர் சாம் இராஜசூரியரால் இன்று கையளிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.(எ-410)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## கொல்களம் அமைத்தல் கேள்விப்பத்திரம் வழங்கல் - கால நீடிப்பு

மேற்படி வேலைக்கு என்னால் 04-11-2005ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பாகக் குறித்த வேலைக்கு கேள்விப்பத்திரம் வழங்குவதற்கான காலம் 02-12-2005 ஆம் திகதி பி.ப.2 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருவதுடன், இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.


மேரி ஜோசப் சாந்தசீலன்,
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(8/46390)(26-19-15)





நேற்றுமுன்தினம் ஆனையிறவில் நடைபெற்ற மாவீரர் தின சிறப்பு நிகழ்வில் எடுக்கப்பட்ட மேலும் சில படங்களை இங்கு காணலாம். நிதித்துறை கணக்காய்வுப் பிரிவைச் சேர்ந்த அறவாணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன்.தியாகம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ், கேணல் ஆதவன் ஆகியோர் ஈகச்சுடர்களை ஏற்றுவதைப் படங்களில் காணலாம்.



கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுக்காலை ஆரம்பமான மாவீரர் நாள் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும் - வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த தேவா அன்ரி மலர் வணக்கம் செய்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.



தமிழீழ மாவீரர் எழுச்சி நாளின் ஆரம்ப நாளான நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாக சேவையின் துணைப்பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன் ஏற்றுவதை முதற்படத்தில் காணலாம். பொதுச்சுடரினை கண்டாவளை உதவி அரச அதிபர் எஸ்.சத்தியசீலனும் மாவீரர்களுக்கான சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகமும் ஏற்றுவதையும் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு தொடரும் மழையினால் பெரும்பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.26

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்கு பல.நோ.கூட்டுறவுச் சங்கம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக மேற்படி சங்கத்தின் 10 கிளைக் கட்டடங்களும் அங்கு விற்பனைக்கென களஞ்சியப்படுத்தப்பட்ட பொருள்களும் மற்றும் தளபாடங்களும் அழிவைச் சந்தித்தன என்றும் -



*மழை வெள்ளத்தின் மத்தியிலும் உழவு இயந்திரம் மூலம் பொருள்கள் ஏற்றி இறக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.*

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாகவும் வெள்ளத்தினாலும் சங்கத்தினால் முள்ளியான், வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் தற்காலிகமாக நிறுவப்பட்ட கிளைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பொருள்கள் சேதமாகியுள்ளன என்று மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கூட்டுறவுக்கிளைகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச்செல்லப் பயன்படும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தினால் பலத்த சிரமத்தின் மத்தியில் சங்கத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரம் மூலம் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் - சங்கம் அறிவித்துள்ளது.

(எ-202)

# திருட்டு வழக்கில் இருவருக்கு இருபதுமாதச் சிறைத்தண்டனை

திருட்டு வழக்கில் எதிரிகளில் இருவருக்கு 20 மாத சிறைத்தண்டனையை சாவகச்சேரி நீதிமன்றம் விதித்தது.

கடந்த வருடம் மீசாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்க நகைகள், பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்ற 6 பேரை நாவற்குழிப் பகுதியில் ரோந்து சென்ற சாவகச்சேரிப் பொலீஸார் கைதுசெய்தனர். அவர்கள் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டது.

இது குறித்த வழக்கு விசாரணை சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றுவந்தது. நேற்று இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

முதலாம், நான்காம் எதிரிகளுக்குத் தலா 20 மாத சிறைத்தண்டனையும், இரண்டாம் எதிரிக்கு எட்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 15 மாதச் சிறைத்தண்டனையும், ஐந்தாம் ஆறாம் எதிரிகளுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத்தண்டனையும் வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மூன்றாம் எதிரி தலைமறைவாகியுள்ளதால் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துக் கைதுசெய்யவும் உத்தரவிடப்பட்டது. (ஒ-117)

# மரக்கறிவிலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு, நவ.26

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி, சுன்னாகம் சந்தைகளில் கொள்வனவு செய்யப்படும் மரக்கறிகள் இந்தச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

இதேவேளை- பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் உள்ளூரில் மரக்கறி உற்பத்திச் செய்கை இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-135)




*தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 15.11.2005 வரை வீரச்சாவடைந்த மாவீரர் விவரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மாவீரர் பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது.*

## கரும்புலி மாவீரர் தொகுப்பு

| | ஆண் | பெண் |
|---|---|---|
| தரைக்கரும்புலிகள் | 61 | 18 |
| கடற்கரும்புலிகள் | 133 | 51 |

## வீரச்சாவடைந்த மாவீரர் விரிப்பு

| ஆண்டு | ஆண் மாவீரர் | பெண் மாவீரர் |
|---|---|---|
| 1982 | 1 | 0 |
| 1983 | 5 | 0 |
| 1984 | 36 | 0 |
| 1985 | 123 | 0 |
| 1986 | 260 | 0 |
| 1987 | 438 | 14 |
| 1988 | 354 | 11 |
| 1989 | 371 | 1 |
| 1990 | 892 | 2 |
| 1991 | 1413 | 209 |
| 1992 | 718 | 74 |
| 1993 | 803 | 124 |
| 1994 | 336 | 12 |
| 1995 | 1220 | 288 |
| 1996 | 1095 | 285 |
| 1997 | 1605 | 507 |
| 1998 | 1155 | 648 |
| 1999 | 1053 | 496 |
| 2000 | 1240 | 743 |
| 2001 | 491 | 270 |
| 2002 | 29 | 16 |
| 2003 | 61 | 11 |
| 2004 | 62 | 17 |
| 2005 | 33 | 5 |
| ஈரோஸ் | 264 | 2 |
| தனிக்குழு | 10 | 0 |

## எல்லைப்படை மாவீரர்

| | ஆண் | பெண் |
|---|---|---|
| எல்லைப்படை மாவீரர் | 274 | 5 |

## சாதாரணதர மாணவருக்கு

யாழ்ப்பாணம்,நவ.26

நோர்வே நாட்டு மாணவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் றீடோ நிறுவனம் ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட கருத்தரங்குகளை நடத்திவருகின்றது.

இக்கருத்தரங்கு மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விசேட ஆசிரிய குழுக்களினால் நடத்தப்படுகின்றது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிவரை இக்கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-202)

## சீமெந்து தொழிற்சாலை ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.26

காங்கேசன்துறை சிமெந்துப் பொதுத் தொழிலாளர் ஒன்றியத்தின் விசேட கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.26

சர்வேஸ்வரக் குருக்கள் வரதராஜேஸ்வரக் குருக்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ' சௌளமும் உபநயனமும்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் மயிலணிக் கந்தசாமி கோயிலில் கதிரமலைச் சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ நா.சர் வேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## மகரஜோதி பெருந்திருவிழா

கோண்டாவில் கிழக்கு சபரீச - ஐயப்பன் ஆலய வருடாந்த மகரஜோதி மண்டல விரத பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி நெய் நிரப்புதல் விழாவும் மறுநாள் மண்டல பூர்த்தி, இருமுடி கட்டுதல், படிஏறுதல், நெய் அபிசேகம் செய்தல் என்பன இடம் பெறும். (ஒ-204)

## முன்பள்ளிக் கலைவிழா

சுழிபுரம், நவ.26

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து முன்பள்ளிச் சிறார்களுக்கான கலைவிழாவை நடத்தவுள்ளனர்.

இக்கலைவிழா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பண்ணாகம் அம்பாள் கலைமன்ற மண்டபத்தில் திருமதி ப.கிருஷ்ண வேணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் கௌரவ விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸும் கலந்துகொள்வர்.(ஒ-28-202)

## புனர்வாழ்வுத் திட்ட தொண்டர்களுக்கு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுத் திட்டத்தின் தொண்டர்களுக்கான கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட தொண்டர்களை இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி நல்லூர் பிரதேசி செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ஒ-180)

## கண்சிகிச்சை முகாம்

நவாலி, ஆனைக் கோட்டை, மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச பொது மருத்துவ கண் சிகிச்சை முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் நவாலி சென்.பீற்றேர்ஸ் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். (ஒ-100)


# COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

## Computer Hardware Engineering Course

*Course Condense :-*
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & Dos
- Internet & E-mail
- கம்ப்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்.
- Mother board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்ப்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம்.(BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software,Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்ப்யூட்டரில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிபார்த்தல்.

நன்மைகள்
- பாடநெறியின் இறுதியில் Computer Hardware சம்பந்தமான பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- Pentium I முதல் Pentium IV வரையிலான Computer களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்ப்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்ப்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

*Hardware* பயிற்சி
- கணனிப் பாகங்களை இனம் காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Net work தொடர்பான அறிமுகம்.
- Trouble Shooting / Maintenance

Free Study Pack & Driver CD

*Soft Ware* பயிற்சி
- Operating System நிறுவும் முறை (Windows 98/ Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை (Sound card, Modem , VGA, TV Card, Printer)
- Trouble Shooting .(Files Updating, Coping)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
28/11/2005 :- 08.30-04.00

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்

*Course Fee :- 2000/=*
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.



## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல விற்பனை நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிக்கு பெண் பிள்ளைகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:** அலுவலக லிகிதர்

**தகைமை:** க.பொ.த.(சா/த) ஆங்கிலம், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்கள் சித்தியடைந்திருக்கவேண்டும்.

மேற்படி பதவிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதப்பட்ட சுயவிவரக் கோவையை 29-11-2005ஆம் திகதிக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**றூபா பன்முக வர்த்தக நிலையம்**
*முகவரி: இல: 104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

(43188)(26-19-46)



## CARITAS - HUDEC - JAFFNA VACANCY

**1. Communication Officer**

**Base Station:** Jaffna

**Main Duties :**
- Organizes the logistics of (national and international) media visits to Caritas-HUDEC. (Arranges clearances, accommodation, travels, etc)
- Regularly accompanies the visitors on field trips, presents program activities, is in charge of translation, and ensures a good understanding by the visitors of the Caritas-HUDEC program activities.
- Assists in the development and production of communication tools and materials for journalists and visitors (maps, background papers, fact sheets, press releases and other data such as photos, interviews and updated activity reports).
- Keeps abreast of developments in local and national affairs.

**Skills Required:**
- Fluency in Tamil and English
- Good writing and editing skills in English
- Information gathering skills, good knowledge of local newspapers
- Good interpreting and translating skills
- Ability to work in the field and travel regularly, including in the Vanni area , possibly during the weekend
- Good team player with good communications skills
- Proficient computer skills (Microsoft Office, Internet, Photoshop)
- Experience in media relations, journalism, of corporate communication
- Knowledge of Caritas-HUDEC Tsunami programs a plus

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 3 December 2005

**Father Jeyakumar**
**Caritas-Hudec**
**14 Mathew's Road, Deogu Street,or** **E-mail: hudec@sltnet.lk**
**Jaffna.**

PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS (43172)


## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 05 - 10 - 1924 | மறைவு 19 - 11 - 2003

### கதிர்காமு கிருஷ்ணன்

(பிரபல ஆயுள்வேத முறிவு -நெரிவு வைத்தியர்)
மீசாலை வடக்கு, கொடிகாமம்
(புத்தூர் சந்தி)

திதி 26.11.2005

பல்லோர் போற்ற பார்தனிலே வாழ்ந்தீர்கள்
நாடி வந்தோர் பலர்க்கு நல்லுதவி செய்தீர்கள்
இரண்டாண்டு காலம் உருண்டோடி விட்டதையா!
வாடி உங்கள் நினைவில் வாழ்கின்றோம் இம்மண்ணில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, பிள்ளைகள்.**

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(43180)(21.19.46)

## 11ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 21 - 10 - 1934 | இறப்பு 26 - 11 - 1994

### அமரர் சின்னவி பாலசிங்கம்

அன்புடன் எமை அரவணைத்த ஐயாவே - இன்று
எமைவிட்டு நீர் பிரிந்து பதினோராண்டுகளாயினும்
என்றும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்...

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி- திருமதி பாலசிங்கம் செல்வம்
பிள்ளைகள்- ஜீவரஞ்சன் (பிரான்ஸ்),
கோறற்றி (நோர்வே),
ரவீந்திரன் (பிரான்ஸ்), அஞ்சலா
மருமக்கள்- விஜயகுமாரி, கருணாநிதி, ஷாயின்
சின்னத்தம்பி மற்றும் பேரப்பிள்ளைகள்.

நாவலர் றோட்,
நாவாந்துறை.

(43189)(26-19-46)

# இருட்டில் தவித்த தமிழருக்கு கையில் கிடைத்த ஒளிவிளக்கு

## 51 ஆவது அகவையில் இன்று....



### ஒளிமழை பிரபாகரன் வாழி!

அகரம் வரைந்த விழிகளின் அழகே வாழி
ஆளுமை வார்த்த ஒளிகளின் சிறகே வாழி
சிகரம் வளர்த்த தமிழன் கொடியே வாழி
செழுமை விளையும் தமிழீழ முடியே வாழி!

வேங்கை மார்பன் பெற்ற சூரியன் வாழி
வெள்ளி யுத்தம்கற்ற மறவன் வாழி
பொங்கும் தமிழ் காக்கும் புலியே வாழி
புதிய வாழ்வை ஆக்கும் நதியே வாழி!

தாமரை முகத்தின் தங்கக் கவிதையே வாழி
தமிழர் யுகத்தின் சங்கப் பலகையே வாழி
சாமரைக் காற்றின் சந்நதப் பொறியே வாழி
சமத்துவ நாற்றின் சந்தன நெறியே வாழி!

தமிழீழ மக்களின் தேசிய கீதமே வாழி
தேசியப் படைகளின் தேவ ராகமே வாழி
அமிழ்த மொழியின் அறிவியல் கணனியே வாழி
ஆயுதச் சுடர்களின் அன்புக் கனியே வாழி!

பாடும் மீன்களின் பவளத் தீவே வாழி
பாட்டாளி மக்களின் பாசப் பூவே வாழி
சீறும் யாழின் சிந்தனைக் கதிரே வாழி
சிவக்கும் மலையின் செந்தமிழ் ஒளியே வாழி!

ஒளிமழை பிரபாகரன் உதித்தநாள் வாழி
ஒர்மமலை பிரபாகரன் பிறந்தநாள் வாழி
கனிமொழி பிரபாகரன் சிரித்த நாள் வாழி
களமொழி பிரபாகரன் மலர்ந்த நாள் வாழி!

- தமிழீழக் கவிராயர்.

### தூயன விளங்கும் சோதி சுடருக பல்லாண்டு!

விண்தொட நிமிரும் வியத்தகு வீரம்
விழிகளில் அன்பெனும் ஈரம்
விலைகொடுத் தெவரும் வாங்கிட முடியா
விடுதலை நெருப்பெனும் பாரம்
மண்தொட இறங்கிப் பரவிடும் பாதம்
மழையினைச் சொரிந்திடும் மாதம்
மானமே தலையில் மகுடமென்றான
மானுட விடுதலைக் கீதம்
கண்படும் வண்ணம் கலக்கிடும் காற்று
கார்த்திகைப் பூக்களின் நாற்று
காவிய மொன்றுக்கானதோர் கவிதை
கைவிளக்கானதை ஏற்று
பண்தொடும் தமிழில் பாடுக வாழ்த்து
பாட்டுடைத் தலைவனைப் போற்று
பாரெலாம் இன்று வாழ்த்திடும் நாளில்
பரவுது விடுதலைக் காற்று!

தூயன விளங்கும் செம்மைச்
சோதியே; புலரிக் கான
நாயனக் குழலில் ஏறும்
நாதமே; திசைகள் யாவின்
வாய்களும் வாழ்த்திப் பாட
வந்தவா; வாகைச் செல்வா!
தேய்வன அறியா எங்கள்
தேசியத் தலைவா! வாழி.

- புதுவை இரத்தினதுரை.

### இன்று புதிதாய் பிறந்தோம்...

தலைவா, நின் செயல் வீரத்தினாலே
தரணியில் தமிழன் புகழுயர்ந்தது...
தாயக விடுதலை உறுதியானது...

ஒளிபடைத்த கண்ணும்
உறுதிகொண்ட நெஞ்சும்
எம் வசமானது...

அறிவெனும் ஆயுதத்தால்
பேரினவாதக் கருவறுக்கும்
ஆற்றல் படைத்து விட்டோம்

இளைய தமிழீழ சக்தியென எழுந்தோம்
இனியவனே,
நின் பிறந்த நாள் பொழுதில்
இன்று புதிதாய் பிறந்த உயிர்ப்புடன்
உங்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்

### தேசத்தின் கிரீடம்

இடர்கள் என்னும்
இலவம் பஞ்சு
நீ ஒரு இரும்புமலை
என்ன செய்யும் உன்னை
சில
சிலந்திவலை
அசாதாரணமான அம்சனே
அயர்ச்சி அற்றவனே
நம்பமுடியாத சாதனைகளை
நம்பிக்கையால் முடித்திருக்கிறாய்!
பாசத்தைத் தவிர
எதற்கும் பணியாதவனே!
நீ நிற்பதற்கு உலகத்திற்கு வெளியே
ஓர் இடம் அமைத்துத்தந்தால்
அங்கு நின்று உலகத்தையே
நீ அசைத்துக் காட்டுவாய்
அன்பிற்கினியவனே
விரல்களுக்கு மோதிரம்
அணிவதைக் கூட
விளம்பரம் செய்யும் உலகில்
ஒரு தேசத்துக்கு கிரீடம் அணிந்துவிட்டு
ஓசைபடாமல் வாழும் உத்தமனே!
உனக்கு இன்று
அகவை ஐம்பத்தொன்று
இன்றுபோல் என்றும் நீ
உலகம் போற்றும்
உயர்ந்தோர் வழியில்
பலவும் பெற்று
சிறந்திட வேண்டும்

ம.ஜனார்த்தனன்

### எம்மை சாபத்திலிருந்து மீட்டெடுத்தவரே வாழ்க!

ஒரு இராமனின் வரவுக்காக...
அகலிகை கல்லாகக் கிடந்ததைப் போல
எம்மினமும் சாபப்பட்டு
கல்லாகத்தான் பல யுகங்கள் கிடந்தது
உன் வருகைக்காக...
கண்டவன் நின்றவன்
வந்தவன் போனவன் எல்லாம்
ஈவிரக்கமின்றி
அடிமாடுகள் போலல்லவா
ஏறி மிதித்துவிட்டுப் போனார்கள்
பாவப்பட்ட இனம்
கல்லாகக் கிடந்தபோது
சாபத்திலிருந்து மீட்டெடுக்க
சாபவிமோசனமாய் நீங்கள்
எம்மோடு நீங்கள் சேர்ந்த போதுதான்
எம்மினத்திற்கு எதிர்காலம் மட்டுமல்ல
தலையெழுத்துக்கூட நல்லதாக மாறியது
நாம் பட்டதும் கெட்டதும்
இப்போ படுவதும் போதும்
காலம் எதிர்பார்த்த காலத்தில் பிறந்தவரே!
காலம் எதிர்பார்க்கும் காலமிது
போதும் பொறுத்தது
எம் விடுதலைக்கான கடைசிப் பயணம்
காலம்எதிர்பார்க்கும் காலத்தில்
நல்ல செய்தி தருவாய் என
இந்நாளில் உம்மை வாழ்த்துகிறோம்

- யோ.யூட்நிமலன்

### அண்ணன் நீ மன்னனடா!

உலகத் தமிழனின்
அஸ்த்தமிப்புக்கு முடிவுகட்ட
சூரியப் புதல்வன்
கார்த்திகையில் உதித்தான்
பேரினவாதப் பேய்கள்
கிலி கொண்டோடின....
பிரசவ வேதனை மறந்து
தமிழ்த் தாயவள் - நீள்
புன்னகை வீசினாள்...
தேசியக் கவிஞர்கள்
தம்பியின் பிறப்பு
நாளைய விடிவென்று பாடினர்
கண்ணனின் பிறப்பு
கம்சனுக்கு தலையிடி!
பிரபாகரனின் பிறப்பு
பேரினவாதத்திற்கு பேரிடி!!
அப்போதே - எங்கள்
வாசல் புகுந்தது வசந்தம்
எத்தனை ஆண்டுகள்
எங்களைக் கொன்றழித்தனர்
உரிமைகளுக்கு
எண்ணையூற்றி தீயிட்டனர்...
எங்கள்
நிலம் பறித்து
சித்திரவதையின் சிரம் பதித்தனர்...
இத்தனைக்கும்
முடிவொன்று தேசியத் தலைவனின்
வழியில் கிடைத்தது....
தரை கடல் வான் என
தமிழ் வீரம் விளைந்தது
புரையோடிய புழுதி விலகியது.....
உலகத் தமிழினமே ஒன்றுபடு
தங்கத் தமிழ்த் தலைவனை - இந்த
தரணியிலே பாடு; மகிழ்ந்து வாழ்த்து
தமிழீழம் எங்கள் கையிலென்று
உரத்துக் கூறு!

-சுதேசிகன்



# பேச்சுவார்த்தை பயன்தரும் என்ற நம்பிக்கை இல்லை

## நீண்ட போருக்குத் தயாராகிறோம்

## பிரபாகரன் பேட்டி

பேச்சு பயன்தரும் என்ற நம்பிக்கை எமக்கு இன்று இல்லை. தமிழ்மக்கள் உறுதியாக இருப்பதால் தமிழீழம் அடைவதற்குரிய வாய்ப்புகள் பிரகாசமாக உள் ளன. நீண்ட போர் ஒன்றுக்குத் தயாராகிக்கொண்டிருக்கி றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வேலுப்பிள்ளைபிரபாகரன் ''புரன்ட்லைன்' [நவ.30-டிசெ13] சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு கூறி யிருக்கின்றார்.

''புரன்ட் லைன்' சஞ்சிகை சென்னை 'இந்து' ஆங்கில நாளிதழ் நிறுவனத்தால் வெளியிடப்படுவது.

திரு டி.எஸ்.சுப்பிரமணியன் திரு பிரபாகரனை பேட்டி கண்டார்.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வழங்கிய செவ்வி. 1985 ஆம் ஆண்டு நவம்பர் 30 - டிசெ.13 திகதியிட்ட 'புரன்ட் லைன்' ஆங்கிலச் சஞ்சிகையில் வெளி வந்திருந்தது. அந்தச் செவ்வியின் தமிழாக்கம் 05.12.1985 ஆம் திகதியன்று-பத்திரிகை ஆரம் பமான பத்தாவது நாளில் உதயனில் பிரசுரமாகியி ருந்தது. சூழ்நிலைப் பொருத்தம் கருதி அதனை இங்கு மீள்பிரசுரம் செய்கின்றோம்.**

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: மற்றைய இயக்கங்கள் போல் அல்லாது உங் கள் இயக்கம் முதலில் ஓர் இராணுவ அமைப்பாக ஆரம் பித்தது. பின்னர்தான் மார்க்ஸிஸ லெனினிச சித்தாந்தங் களைச் சுவீகரித்துக்கொண்டது. ஈழமக்கள் விடுதலை இயக் கம் ஒரு கம்யூனிஸ்ட் பிரிவாக ஆரம்பித்து பின்னர் இராணுவப் பிரிவைச் சேர்த்துக்கொண்டது.

பதில்: ஆரம்பத்தில் எமக்கு என்று ஓர் இலட்சியம் இருந் தது. அது சோஷலிச அரசு ஒன்றை நிறுவுவது. நாம் நேரடி யான போராட்டம் ஒன்றில் இறங்கிவிட்டோம் என்பதால், இந்த இலட்சியத்திற்கு நாம் வடிவம் கொடுக்கவில்லை.

கேள்வி: போராட்டங்கள் குறித்து உங்கள் துயர அனுவங் களின் அடிப்படையில் ஈழம் பற்றிய வெளிநோக்கம் என்ன? தமிழீழம் பெறமுடியும் என்று கருதுகின்றீர்களா?

பதில்: எமது மக்களின் தீர்மானம் உறுதியாக இருப்ப தால், தமிழீழம் அடைவதற்குரிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. நீண்ட போர் ஒன்றுக்குத் தயாரகின்றோம்.

கேள்வி: புலிகளின் பொதுவான நடவடிக்கை முறை தாக்கி விட்டு ஓடிவிடுவது என்ற தந்திரோபாயம் என்று தெரிகின் றது. அதற்குப் பிறகு இராணுவம் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்குகின்றது.

1983 கலவரம்கூட 13 இராணுவ வீரர்களை மறைந்து நின்று தாக்கிக்கொன்றதால்தான் ஏற்பட்டது என்ற கருத்துப் பரவியுள்ளது. பலஸ்தீன விடுதலை இயக்கம், ஐரிஷ் விடு தலை இராணுவம் ஆகியன தாக்கிவிட்டு ஓடும் தந்திரங் களில் ஈடுபடுவது இல்லை. மேலும் அவை தங்கள் தளத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன. நீங்கள் உங்கள் தளத்தை விரிவுபடுத்தியுள் ளீர்களா?

பதில்: தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தை மேற்கொள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு சொந்த இடம் இல்லை. ஏனெனில், அந்நிய மண்ணில் இருந்து அவர்கள் போராடுகின் றார்கள். ஐரிஷ் விடுதலை இராணுவம் தாக்கிவிட்டு ஓடினாலும் பிரிட்டிஷ் இராணுவம் சிவிலியன்களை தாக்குவது இல்லை. நாம் மிகவும் கஷ்ரத்தின் மத்தியில் செயற்படுகின்றோம்.

நிதி, இராணுவத்திடம் இருந்து எதிர்ப்பு அடிப்படையிலான தாக்கங்கள் இருந்தும் யாழ்ப்பாணத்திலும் மற்ற இடங்களி லும் நாம் இராணுவத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம். அத்துடன், அதனை நாம் வேறுபடுத்தி வலயங்களாக்கி விட்டிருக்கிறோம்.

எங்களுக்கும் மக்களுக்கும் இடையே இடைவெளி இல்லாத தினால்தான் இது சாத்தியமாகின்றது. யாழ்ப்பாணத்திலும் திருமலை, நிலாவெளிப் பகுதிகள் எல்லாம் எங்கள் கட்டுப் பாட்டுக்குள் உண்டு. சிவில் நிர்வாகம் அங்கு நடத்துகின்றோம்.

அதன் அர்த்தம், தாக்கிவிட்டு ஓடும் வன்முறைக்கு மேலே ஒரு படி சென்றுள்ளோம் என்பதே. ஆரம்பத்தில் தாக்கிவிட்டு ஓடும் தந்திரங்களைக் கடைப்பிடித்தாலும் படிப்படியாகத் தடைகள் வருவதற்கு நாம் அனுமதிக்கவில்லை. கால ஓட்டத் தில் இது ஒரு மக்கள் போராட்டமாக மாறிவிடும்.

இப்போதே யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மக்கள் போராட்டமாகிவிட்டது. மேலும் நாங்கள் ஒரு கெரில்லாப் பிரிவை வைத்துள்ளோம். கெரில்லாப் போர் முறையில் தாக்கி விட்டும் ஓடும் தந்திரமும் ஒன்றாகும். ஆரம்ப வளர்ச்சியின் போது இதைத்தான் கடைப்பிடித்தோம். இப்போது ஒரு தாக்கு தலின்பின் மக்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கின்றோம்.

நாங்கள் மக்களுடன் நெருக்கமாக இருப்பதால் இலங்கை அரசு மக்களைத் தாக்குகின்றது. மக்களுக்கும் எமக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தவே அரசு இப்படிச் செய்கின்றது. மக்கள் ஆதரவு இல்லையென்றால் நாம் காட்டிக் கொடுக்கப்பட்டு இருப்போம், இயக்கமும் இருந்திருக்க முடியாது.

கேள்வி: இந்திய அரசு பற்றியும் பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவருவதற்கான முயற்சிகள் குறித்தும் உங்களின் நோக்கம் என்ன? தீர்வு ஒன்றை ஏற்குமாறு உங்களை இந்தியா நெருக்கின்றதா?

பதில்: இதுவரை நாங்கள் நெருக்கப்படவில்லை. இதே சமயம் பேச்சுகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா முயல் கின்றது. ஆனால், பேச்சு மூலம் எதுவுமே தீர்க்கப்படமுடியாது என்பதை எங்கள் வரலாறு காட்டுகின்றது. இருந்தும் இந்தியா வின் முயற்சிகளை நாம் ஆதரிக்கவேண்டும் என்பதால் பேச்சுகளில் பங்கெடுக்கின்றோம். அதேவேளை, இலங்கையி னால் எதுவித பயனான தீர்வுக்கும் வரமுடியவில்லை.

உதாரணமாக போர் நிறுத்தத்தை அரசு மீறுகின்றது. அதுமட்டுமன்றி சரிவர அமுலாக்குவதும் இல்லை. பேச்சுக்கு முன்னோடியாக அமைதி நிலவ வேண்டும் ஆனால் இலங்கை அரசு தினமும் எங்களைக் கொல்கின்றது.

கேள்வி: எல்லாத் தமிழ் இயக்கங்களையும் நாட்டை விட்டு வெளியேறும் படி இந்தியா சொல்வதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: எமது எல்லாப் பயிற்சித் தளங்களும் இலங்கை யிலேயே உள்ளன. அங்குள்ள [இலங்கை] அரசியல் நிலை யைப் பகிரங்கப்படுத்தவே நாங்கள் சென்னையில் இருக்கி றோம். எந்த வேளையிலும் தாயகம் திரும்பத் தயார். இலங்கை குற்றஞ் சாட்டுவதைப் போல எமக்கு இந்தியாவில் எந்த விதப் பயிற்சித் தளங்களோ அல்லது வேறு எதுவுமோ இல்லை.

ஆள்களைத் திரட்டுதல் தளங்கள் எல்லாமே எமது நாட்டில் தான். அதனால் இப்பிரச்சினை எம்மைப் பாதிக்காது.

கேள்வி: சமீபத்தில் இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் நீங்கள் ஒரு பயணம் மேற்கொண்டு உங்களின் பிராந்திய கமாண் டர்களைச் சந்தித்தீர்கள். உங்கள் பிரிவினரின் தன்நம்பிக்கை எப்படி உள்ளது? அங்கு நிலைமை என்ன?

பதில்: முன்னேற்றம் தான். போராட்ட வேகத்தில் குறைவு கிடையாது. மெதுவாக சாவதிலும் பார்க்க மொத்தமாக போரா டிச் சாவது மேல் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பலமாக உள்ளது. எங்கள் தோழர்கள் மக்களுக்கு நெருக்கமாக உள்ள னர். உறுதியாகவும் உள்ளனர். ஒரு போராட்டம் இருக்கும் வரை அவர்கள் தங்கள் இலட்சியத்துக்காக போராடுவார்கள். இறு தித் தோழன் இருக்கும்வரை விடுதலைக்காகப் போராடுவோம்.

கேள்வி: பேச்சுவார்த்தைகளில் இருந்து ஏதாவது வெளி வரும் என்று கருதுகின்றீர்களா?

பதில்: எங்களுக்கு நம்பிக்கை இல்லை. முப்பது ஆண்டு களாக நடந்தவற்றையும், ஜெயவர்த்தனவின் வரலாற்றையும் நாம் அறிந்துள்ளோம். சாதாரண மக்களுக்குக் கூட பேச்சில் நம்பிக்கை கிடையாது. இந்தியா, பேச்சுக்கு எங்களை அழைக் கும் போது, அது எங்களுக்கு அரசியல் ஆதரவு தருகின்றது.

அந்தத் திருப்திக்காக பேச்சுகளில் கலந்துகொள்கின் றோம். அதனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கைகளில்தான் முடிவுகள் உள்ளன.

கேள்வி: பிரதமர் ராஜீவ்காந்தி வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி ஆகியோரின் அணுகுமுறைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: பிரதமர் ராஜீவ்காந்தியின் அணுகுமுறை சமாதான வழிகளில் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர் நினைக்கின்றார்.

போராட்டம் மூலம் அழிவு சந்தேகத்துக்கு இடமில்லாதது. அழிவின் அளவைக் குறைத்து பிரச்சினையைத் தீர்க்க பிரத மர் ராஜீவ் சமாதான வழியை நாடுகின்றார். போராட்டம் நீடித்து இழுபடக் கூடியது ஆகும். அகதிகள் பிரச்சினை கூட இந்திய அரசுக்கு உண்டு. எனவேதான் சமாதான வழியில் பிரச்சினை யைத் தீர்க்க பிரதமர் ராஜீவ் விரும்புகிறார். ஜே.ஆர். ஜெய வர்த்தன அதைத் தவறாகக் காட்டுகின்றார்.

திரு.பண்டாரியின் அணுகுமுறை

1. அவர் இந்திய அரசின் பிரதிநிதி

2. பிரதமர் சார்பில் சமாதான வழிமுறைகளில் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண தன்னாலான அளவுக்கு அவர் முயற்சிக் கிறார். இதுவரை போர்நிறுத்த நிபந்தனை விதிமுறைகளைக் கூட ஜெயவர்த்தன அமுலாக்கவில்லை.

எனவே போர்நிறுத்த முயற்சியில் கூட திரு ரொமேஷ் பண் டாரியால் வெற்றிபெற முடியவில்லை.

கேள்வி: உங்களினதும் மற்றய இயக்கங்களிலும் அதிக மான அளவு ஜனநாயகம் கிடையாது என்ற கருத்து உண்மையா?

பதில்: இக் கேள்வியை எமது உறுப்பினர்களிடம் கேட்டி ருக்க வேண்டும். அதிகளவு சுதந்திரம் வழங்கியுள்ளோம். ★

# தமிழ்த்தாய் எதிர்பார்த்த பிள்ளை...

மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர்

நெருக்கடிக்கு ஈடுகொடுப்பவனே தலைவன் என்றதன்படி தமிழீழத்தின் வரலாற்றைப் பார்க்கையில் நெருக்கடிக்கு ஈடு கொடுத்த மூன்று தலைவர்களை நாம் காணலாம். டொனமூர் எனின் இனிமேல் தமிழர் இல்லை. வெறிகொண்டகும் பலுக்கே நாம் ஆட்சியை ஒப்படைக்கின் றோம். போதிய பாதுகாப்பற்ற நிலையில் இந்த அரசியல் யாப்பை ஏற்போமாயின் எம் இனம் பூண்டோடு அழிக்கப்படும் என்று தனது 77 ஆவது அகவையில் 1928இல் சட்டசபையில் எச்சரித்தவர் சேர் பொன். இராமநாதன். இவரின் எச்சரிப்பை ''அறளை பேந்த கிழவனின் கூற்று'' என்று சிங்களத் தலைமைப் பீடம் எள்ளிநகையாடியது. அன்றைய எம் தமிழ்த்தலைவர்களோ ''அறிவுடையார் ஆவதறிவர்'' என்ற வள்ளுவரின் கூற்றை மறந்து சேர் பொன். இராமநாதன் இடித்துரைத்த உண்மைகளைப் பொருட்படுத்தவில்லை. அரசியலிலும் ஆன்மீகத்திலும் முதிர்ச்சி பெற்ற ஞானி யான இராமநாதன், ''முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனே'' என்று திரு வாசகத்தை மேற்கோள்காட்டி எப்படியும் தமிழினத்திற்கு ஏற்படும் அழிவைத் தடுக்க டொனமூர் யாப்பினை எதிர்த்து ஓர் அறிக் கையினைப் பிரித்தானிய அரசனிடம் ஒப் படைத்தார். இவரின் இந்த அறிக்கை தமிழ் மக்களின் அரசியல் யாப்பு விவிலியம் என்ற அறிஞர் உலகினால் வர்ணிக்கப் பட்டது. 1915இல் சிங்களவரைக்காக்க இவர் லண்டன் சென்று ஓர் அறிக்கையை விடுத்துத் திரும்பிவரும்போது சிங்களத் தலைமைப் பீடத்தினால் வாகைசூடி வரவேற்கப் பட்டார். 1930இல் தமிழருக்காக லண்டனில் குரலெழுப்பித் திரும்பியபோது இவரை வரவேற்க ஆள்களில்லை. எனினும் ''என்க டன் பணி செய்துகிடப்பதே'' என்று மெய் யியல் நிலையில் விளக்கமளித்த இவர், 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்ற நிலையில் காலமானார்.

### தந்தை செல்வா

அடுத்து எம் நினைவுக்கு வருபவர் மெல்ல மெல்லப் பணிபுரிந்த மேதை செல்வ நாயகம். இவரை ''தீர்க்கதரிசி என்றும்'' ''ஆவது அறியும் அறிஞர்'' என்றும் அரசி யல் உலகம் வாழ்த்துகின்றது. தொலைநோக் குப் படைத்த இப்பெருமகன், 1948இல் இந் திய வம்சாவளி மக்களின் குடியுரிமை, வாக் குரிமை பறிக்கப்பட்டபோது, ''இவர்களின் கழுத்து இன்று அறுக்கப்படுகிறது; நாளை நமக்கும் இந்நிலையே ஏற்படும்'' என்று எச் சரித்தார். தொலைநோக்குச் சிந்தனையோடு அவர் கூறிய கூற்றுகள் அனைத்தும் மெய்ப் பிக்கப்பட்டன. பட்டிப்பளை ஆறு பாய்ந் தோடிய மண் கல்லோயாவாக மாற்றப்பட்டு அரசின் ஆதரவோடு சிங்களக் குடியேற்றம் நடைபெற்றபோது ''அபிவிருத்தியின் பெய ரில் தமிழ் மண் அபகரிக்கப்படுகின்றது'' என்று தந்தை செல்வா அன்று கூறியபோது அவருக்குக் கிடைத்த பரிசு யாரோ ஒரு முஸ் லிம் இளைஞன் அவர் நெற்றியில் கல்லெறிய இரத்தம் பாய்ந்தோடிய நிகழ்ச்சியாகும். கிறிஸ்தவராகிய தந்தை செல்வா இந்த இளைஞனின் செயல் கண்டு ஆத்திரப்படாது ''இவன் செய்வது யாதென்றறியான் மன் னித்திடுக'' - என்று கூறினார்.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப் பட்டது. தரப்படுத்தலின் பெயரில் தமிழ்ப் பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்லாது தடுக்கப்பட்டது. பின்பு தென்பகுதியில் ''பெற்றோர் விரும்பிய மொழியில் பிள்ளை கள் பயிலலாம்'' எனக் கூறி தமிழ்ப் பள்ளிக் கூடங்களுக்கு மூடுவிழா நடத்த, தென்பகுதி களில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டதன் விளைவால் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தில் பயிற்சிபெற, குடித் தொகைக் கணக்கில் அவர்கள் சிங்களவர் களாகக் கணிக்கப்பட்டனர். அத்தோடு புத்த மதத்திற்கு உரிய இடம் வழங்கப்படவேண் டும் என்று முதலில் சட்டத்தைக் கொண்டு வந்த சிங்கள அரசு, பின்பு மேலும் அதனை மாற்றி பௌத்தத்திற்கு முதன்மை இடம் கொடுக்க வேண்டுமென்று பௌத்தத்தை அரசு பேணிக்காக்கவேண்டும் என்றும் சட்டங் களைக் கொண்டுவந்து நிறைவேற்றியது.

இத்தகைய ஆபத்துகளை எதிர்நோக்கிய தந்தை செல்வா பல்லினம், பல்மொழி, பல் சமயம் உள்ள நாட்டில் ஒற்றையாட்சி உத வாது. எனவே, இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என 25 ஆண்டுகளாக இடித்துரைத்தார். இக்கூற்றினைச் சிங்களப் பேரினவாதம் ஏற்க மறுத்ததன் காரணமாக நவம்பர் 19ஆம் திகதி தம் மக்களுக்கு இறுதி உயிலாக அவர் கூறிச்சென்றது, இணைப் பாட்சி ஈழத்தமிழ் மக்களுக்குத் தீர்வில்லை. தனிநாடு அமைத்தால்தான் தமிழன் வாழ முடியும். சிங்கள வெறியாட்டத்தைத் தடுக்க முடியும் என முழங்கினார். இது நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சி.

ஈழத்தமிழன் வாழ்வில் நவம்பர் மாதம் முக்கியத்துவம் வாய்ந்த மாதமாக விளங்கு கின்றது. நவம்பர் 19இல் தந்தை செல்வா தனிநாடு கேட்டார். பின்நோக்கிப் பார்க்கை யில் சேர் பொன். இராமநாதனின் இறப்பு 26.11.1930இல் நடைபெற்றது. 24 ஆண்டு கள் உருண்டோடிய நிலையில் நீண்டகால வெற்றிடத்திற்குப் பின்பு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 26.11.1954 இல் பிறந்தார்.

### பிரபாவின் தோற்றம்

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்துப் போலும் ''தங்கத்தமிழீழ மண்ணில் ஒரு தலைவன் பிறந்தான். தமிழீழநெஞ்சங்களில் எல்லாம் தம்பி நிறைந்தான்'' என்று களிப் படைந்து கானமிசைக்கும் நாளாக நவம்பர் 26 அமைகிறது. பிரபாகரனுக்கு இன்று அகவை 51.

தலைவர் பிரபாகரன் எம் தேசத்திலே எங்கணும் நிலையான புகழ்பெற்று விலை தேடி வருவதற்குரிய தலைவனாக விளங்கு கிறார். ஆனால், விலைபோக மறுக்கின்ற

(09ஆம் பக்கம் பார்க்க)

# தேசியத் தலைவரே தமிழ் மக்கள்! தமிழ்மக்களே தேசியத் தலைவர்!!



தமிழ்த்தேசிய உணர்ச்சி எழுச்சி பெற்றுள்ளது; இமயம்போல் உயர்ந்து நிற்கின்றது. அவ்வெழுச்சி ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டது. ஜனாதிப்தித் தேர்தலிற்காகத் தமிழ்த்தேசியத் தலைவனது நா அசையவில்லை. என்றாலும், தமிழ்த்தேசியத் தலைவனது எண்ணத்தை எண்ணியாங்கு செய்து காட்டினர் தமிழ்த்தேசிய மக்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையில்லை என்று ஒலித்த ஒலி தமிழ்த் தேசிய மக்களின் உள்ளத்தில் ஓங்கி ஒலித்தது. அதனை வேதவாக்காக ஏற்றனர். தமிழ்த் தேசிய மக்கள் தேர்தலில் அக்கறைகாட்டவில்லை.

**தலைவரே மக்கள்**

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத் தலைவரின் வேண்டுகோளை ஏற்று தமிழ்த்தேசிய மக்கள், தமிழ் அரசுக் கட்சி சார்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்தனர். அத்தேர்தலின் மூலம் தமிழ்த்தேசியத் தலைவர்தான் தமிழ்த்தேசிய மக்களின் ஏக தலைவர் என்பதனை வெளிப்படுத்தினர்.

அவ்வாறான தமிழ்த்தேசிய மக்களின் வெளிப்பாட்டைச் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்த் தேசியத் தலைவரின் அரசியல் குரல்தான் தமிழ்த்தேசிய மக்களின் குரல் என்பதை ஏற்கமறுத்தனர். ''தமிழ்த்தேசிய மக்கள்தான் தமிழ்த் தேசியத் தலைவர். தமிழ்த்தேசியத் தலைவர்தான் தமிழ்த்தேசிய மக்கள்'' என்ற குரலை அலட்சியப்படுத்தினர்; மறுதலித்தனர். ஆனால், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ்த் தேசியத் தலைவர்தான் தமிழ்த் தேசிய மக்கள்'' என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**சமஷ்டிக்கு ஆப்பு**

தந்தை செல்வா 25 வருடங்களுக்கும் மேலாக சமஷ்டி அரசியல் முறைக்காகப் பாடுபட்டார். அதற்காகப் பல அஹிம்சாவழிப் போராட்டங்களை நடத்தினார். சிங்களத் தலைவர்களும் சிங்களத் தேசிய இனமும் சமஷ்டி அரசியல் முறையை ஏற்றுக்கொள்ளவே இல்லை. 1972ஆம் ஆண்டின் அரசமைப்பில் இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சி அரசொன்றாகும் என்ற எழுத்து வடிவம் கொடுத்தனர். அத்தோடு நாடாளுமன்றம் தனது சட்டமாக்கும் தத்துவத்தை எவ்விதமாகவேனும் பராதீனப்படுத்தலாகாது என்றும் அவ்வாறு அதிகாரம் கொண்ட வேறு சபையை உருவாக்கமுடியாது என்றும் திட்டவட்டமாக அரசமைப்பில் முதன்முதலாக எழுதப்பட்டது. அவ்வாறே 1978ஆம் ஆண்டு அரசமைப்பிலும் கூறப்பட்டது. இவ்வரசமைப்புகள் மூலம் சமஷ்டி அரசியல் முறைக்கு ஆப்பு வைக்கப்பட்டது.

**சி.வி.விவேகானந்தன்**
சட்டத்தரணி

சிங்கள மேலாண்மையாளர்கள் அதிகாரப் பகிர்வை எதிர்த்தார்கள். அதிகாரப் பகிர்விற்காக வரையப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியவை சிங்கள அரசுகளால் கைவிடப்பட்டன. அதிகாரம் அற்ற மாவட்ட அபிவிருத்திச் சபையைக் கொடுத்து ஏமாற்றினார்கள்.

இந்தியாவின் நிர்ப்பந்தத்திற்காக எழுதப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்தப் பின்னிற்கின்றார்கள். அரசமைப்பில் விவரிக்கப்பட்ட அதிகாரங்களையோ மாகாண சபைச் சட்டத்தில் கூறப்பட்ட உரிமைகளையோ இற்றைவரை கொடுப்பதற்கு முன்வரவில்லை. 13ஆவது திருத்த அரசமைப்பின் படி பொலீஸ் அதிகாரம் மாகாணசபைக்குக் கொடுக்கப்படவேண்டுமென கூறப்படுகின்றது. அந்த அதிகாரம் எந்தவொரு மாகாண சபைக்கும் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளிடமிருந்து மீளப்பெற்றுக்கொண்டனர்.

**தமிழர் படைபலம்**

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் மூலம் தமிழ்த் தேசிய மக்கள் ஒரு பயனும் பெறவில்லை. நாடாளுமன்றம் தமிழ்த்தேசிய மக்களுக்கு அவலத்தைக் கொடுத்தது. இவ்வாறான சூழ்நிலையில் படைபலத்தின் மூலம்தான் தமிழ்த் தேசிய மக்கள் உரிமைகளைப் பெறலாம் என்ற உண்மையைத் தமிழ்த் தேசிய தலைவர் உணர்ந்தார். பல இன்னல்கள் மத்தியிலும் தமிழ்த்தேசியத் தலைவர் படைபலத்தை உருவாக்கிக் கொண்டார். அவ்வாறு உருவாக்கப்பட்ட படைபலம் பல கோணங்களிலும் விரிவடைந்துள்ளது.

அவ்வாறான படைபலத்தால் அடைந்த வெற்றிகளாலும் அப்படைபலத்தைத் தக்க வைத்திருப்பதாலும் தான் 'ஈ இருக்க இடம் தானும் கொடுக்கமாட்டோம்' என்றவர்கள் - ஆறாவது அரசமைப்பின் திருத்தத்தின் மூலம் தமிழ்த்தேசிய மக்களின் ஒரேயொரு மிஞ்சியிருந்த உரிமையான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பறித்தெடுத்தவர்கள் தமிழர் தாயகத்திலிருந்து தமிழ்த் தேசிய மக்களை வேறு நாடுகளுக்கு விரட்டியவர்கள் - சமஷ்டி மூலம் அதிகாரப் பகிர்வைச் செய்வதற்கு இறங்கி வந்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியத் தலைவர் அவ்வாறான படைபலத்தை உருவாக்கியிராமலிருந்தால், இன்று இவர்கள் இவ்வளவு தூரம் இ[illegible] வந்திருக்கமாட்டா[illegible]. அதனை அரசியல் பிரச்சினையாக ஜனாதிபதித் தேர்தலில் முன்வைத்திருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு எதிர்பார்த்தது சிங்கள - பௌத்த பெரும்பான்மை மக்கள் பழைய பல்லவியைப் பாடத்தொடங்கிவிட்டனர். ஒஸ்லோ பிரகடனத்தை ஏற்றுக்கொண்டோம் என்ற கட்சியினர் வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்க மறுக்கின்றனர். இதுதான் இன்றைய உண்மையான நிலையாகும்.

பிரிபடாத இலங்கை முழுவதும் தங்களுக்கே சொந்தம். தமிழர் தாயகம் என்றொன்றில்லை. சமஷ்டி அரசியல் முறையோ அதிகாரப் பகிர்வோ கிடையாது என்ற நிலைப்பாட்டிற்குச் சிங்கள மேலாண்மையாளர் வந்துவிட்டனர். தமிழ்த்தேசிய மண்ணின் இலட்சியத்தையும் சிங்கள தேசத்தின் எண்ணத்தையும் ஜனாதிபதித் தேர்தல் தெட்டத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

யுத்தத்தால் தமிழர் தாயகம் சீரழிந்துள்ளது. மனித உயிர்களும் வளங்களும் அழிக்கப்பட்டுள்ளன. மீண்டுமோர் அழிவைத் தமிழர் தாயகம் தாங்குவது கடினம். இவ்வாறான சூழ்நிலையில் 51ஆவது வயதில் காலடி வைக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் போரியலில் கொடிகட்டிப் பறப்பதோடு அரசியல் சாணக்கியத்திலும் தலைசிறந்து விளங்குகின்றார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசியல் நகர்வுகளை வெற்றிகரமாக நகர்த்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைச் செயலற்றதாக்கிக் காட்டியவர். இன்னாரை விஞ்சும் மனோபலமும் தூரநோக்கும் சக்தியும் தமிழ்த்தேசியத் தலைவருக்கு உண்டு.

தமிழ்த்தேசிய இனத்தின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான சகலவித சக்தியையும் ஆற்றலையும் தமிழ்த் தேசிய தலைவர் பெற்றிடவேண்டும். தமிழ்த் தேசிய இனம் வரலாற்றுச் செழிப்புடன் அமைதியுடன் வாழ்ந்திடவேண்டும். அந்த இலக்கை நோக்கிப் பயணம் செய்யும் தமிழ்த் தேசியத் தலைவரே நீடு வாழ்க. ✱

# பிரபாவின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வியியற் கல்லூரியில் இரத்த தானம்

யாழ்ப்பாணம்,நவ.26

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 51ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் நேற்றுமுன்தினம் இரத்ததானம் வழங்கினர்.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் முகிழ்நிலை ஆசிரியமாணவர்கள், விரிவுரையாளர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு இரத்தம் வழங்கினர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். சிவசங்கர் தலைமையிலான குழுவினர் இரத்தம் சேகரிக்கும் பணியை மேற்கொண்டனர்.

(ஒ-13-86)



தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 51 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் நேற்றுமுன்தினம் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: கவிதரன்)

# தமிழ்த்தாய் எதிர்பார்த்த...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவராவார். இவர் தமிழ் இனத்திற்கு ஏற்படும் இன்னல்கள் கண்டு கொதித்தெழுந் தார். பல இளைஞர்களைச் சேர்த்து களம் குதித்து வரலாறு படைத்தார். தன் இன மானத்தை மட்டும் மதித்த இவர் தன் பகை தாவியே வந்திட்டபோது தன் தாள் கொண்டு மிதித்தார்.

எங்கள் தாயகம் எமக்கு மூச்சு என்றவர், தமிழீழமே எங்கள் பேச்சு என்றவர், வந்திடும் படைகளை வீச்சென்று வீழ்த்தினார். எங்கள் தாய் மண்ணில் பிள்ளையாய் பிறந்த இவர் தமிழீழ மாளிகை வாசலைத் திறந்துள்ளார்.

புலிப்படைகொண்டு களமிசை நிற்கின்ற இவர் பகைவனைப் பந்தாடுகிறார். விடுதலை ஒன்றே எம் தலைவன் இலக்கு. வெற்றி ஒன்றே அவர் முரசின் முழக்கம். தலைவன் வாழும் இக்காலத்தில் தவறாது தலைதூக்கும் ஈழம் என்பது எமது உறுதிப்பாடாகும்.

ஆயிரம் ஆண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்த எம் தமிழரின் வேதனைமிக்க வாழ்வை முடிக்க வந்த இவன் தமிழின் எழுச்சியை முடுக்க வந்துள்ளான். மேடையில் பேச இவன் ஏறியதில்லை. தேர்தல் சேற்றிலும் இறங்கியதில்லை. தன் தாயை அதிகம் பார்த்தவனில்லை. ஆனால், தமிழ்த் தாய் நெடுநாள் எதிர்பார்த்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் 51ஆவது பிறந்தநாள் இன்று. பீடு நடை உடைய பிரபாகரன் புகழ்பாடி தமிழ் ஈழத்தை அவன் வாழும் காலத்திலேயே காண்போம். ✱

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் உங்கள் வீடுகள் அழிந்துவிட்டதா!**

மீளக்குடியேற வசதி இன்றித் தவிக்கின்றீர்களா?

✱ உலக வங்கி, வடக்கு - கிழக்கு மாகாண சபையுடனும் அரசுடனும் இணைந்து யுத்தத்தால் அழிவடைந்த வீடுகளை மீள் நிர்மாணம் செய்ய நன்கொடை வழங்குகின்றது.

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா.

**ஆ அப்படியா!**

உங்களுக்கு நன்கொடை கிடைக்குமா?

விவரம் நாளைய பத்திரிகையில்

(அ/46378) (24-45-15)

## தென்மராட்சி எரிபொருள் நிலையத் திறப்புவிழா

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கைதடிச் சந்திக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் நிலையம் இன்று சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (3-117)

## தொலைபேசி பாவித்த இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, நவ.26

இரு கையடக்கத் தொலைபேசிகளின் மணியொலித்து நீதிமன்ற செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவித்ததால் அவற்றினை வைத்திருந்த இருவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இச்சம்பவம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. நீதிமன்ற செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் சம்பந்தப்பட்ட இருவரின் தொலைபேசிகளின் மணிகள் ஒலித்ததாகவும் இந்த நபர்களுக்கெதிராக நீதிமன்றப் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (3-117)


# பிறந்தநாள் வாழ்த்து



26 ✣ 11 ✣ 2005

இன்று தனது 50 ஆவது அகவையை நிறைவு செய்யும் வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**செல்லத்துரை செந்தில்நாதன்**

குடும்பத்தினரை சகல சௌபாக்கியங்களும் பெற்று அவனியிலே என்றும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்

திரு.சி.செல்லத்துரை (அப்பா) குடும்பத்தினர்,
திரு.திருமதி ஆ.செல்வரத்தினம் (மாமா) குடும்பத்தினர்,
திரு.திருமதி செ.கருணாகரன் (மைத்துனர்-பிரான்ஸ்) குடும்பத்தினர்,
திரு.திருமதி செ.செந்தில்செல்வன் (சகோதரன்) குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(43173)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி பரமேஸ்வரன் - சந்திரவதனி தம்பதியரின் **செல்வப் புதல்வி பவானி** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26-11-2005) சனிக்கிழமை கலாசாலை வீதி, திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார் மற்றும் அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார்கள், சிவகாமசுந்தரி அம்மன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துத் தகவல்:
**சு.பரமேஸ்வரன்**
(அப்பா இ.மி.ச.)

செல்வி பவானி 26-11-2005

(43155)(50)



# ஈரைந்து வருட நினைவினில்...





மண்ணில்
22.07.1974 ★ 27.12.1978
விண்ணில்
21.11.1995 ★ 27.11.1995

கப்டன் தமிழ்நெஞ்சன்
(துரைசிங்கம் செல்வராஜ்)
(மருத்துவப் பிரிவு)

வீரவேங்கை முரளீதரன்
(இராசதுரை ஜெயக்காந்தன்)

(நிரந்தர முகவரி - திருப்பூர் மயிலிட்டி)

அண்ணன் வழிசென்று
தமிழ் மண் மீட்க தன்னுயிர் ஈந்த
"சகோதரர்களே!" எமை விட்டு மறைந்து
ஈரைந்து வருடங்கள் சென்றாலும்
என்றும் உம் நினைவுகளுடன் நாம் !

தற்காலிக முகவரி:
சக்கோட்டை

தகவல் :
-குடும்பத்தினர்
தங்கை.

(43075)


## தேங்காய் வீழ்ந்து பெண் காயம்

தென்மராட்சி, நவ.26

மரத்திலிருந்து தேங்காய் குடும்பப் பெண்ணின் தலையில் வீழ்ந்து காயப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்றது. இதேயிடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் சகுந்தலாதேவி (வயது 42) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (3-117)


## To Let

A House with floor area nearly 2,400 square feet. Ten rooms, two garages, two gates, ample parking space for ten vehicles, four bath rooms, will be rented out from this date. The house is situated close to Jaffna general hospital and railway station. Rent negotiable.
Contact T.P. 021 222 5110, 011 250 3336.

(43016)



# அகவை அறுபதில் ஓய்வு பெறும் அதிபருக்கு சேவை நலன் பாராட்டு - 26.11.2005



திருமதி அனந்தநாயகி (வனஜா) சண்முகானந்தன்
(B.A., Dip in Edu., M.A. SLPS I)

கல்விப் பணி

| | |
|---|---|
| | ஆசிரியர் சேவை 1970 - 1991 |
| பாடசாலைக் கல்வி | மன்./புனித சவேரியார் பெண்கள் கல்லூரி |
| யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வித் |
| யா/ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி | யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| பட்டப்படிப்பு | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை |
| B.A. இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை 1968 | அதிபர் சேவை 1991 - 2005 |
| Dip. in Ed. கொழும்புப் பல்கலைக்கழகம் 1976 | யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| M.A. in Ed. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1986 | யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் |

அகவை அறுபது வரை 35 வருடங்களாக நல்லாசிரியராக சிறந்த அதிபராகக் கல்விப் பணி புரிந்து தனது சேவையில் நிறைவு கண்டு 26.11.2005 சனிக்கிழமை ஓய்வுபெறும் எமது அதிபர் திருமதி. அ.சண்முகானந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் எமது பாடசாலையில் கடந்த 7 ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துத் தன்பணியைச் சிறப்புடன் நிறைவுசெய்து ஓய்வுபெறும் அவரை அவரது ஓய்வுக்காலத்தில் சகல வளங்களையும் பெற்று நிறைவாக வாழ எல்லாம்வல்ல கற்பக விநாயகர் அருளை வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.
**யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.**



# EMPLOYMENT OPPORTUNITIES

World Vision

*World Vision is an International Christian humanitarian, relief and development agency looking for suitable qualified candidates for the positions of,*

**Zonal Finance Coordinator @ Northern Zone-1, Accounts Assistant @ Jaffna-1**

The purpose of this position is to ensure high level of financial accountability and integrity at relief office in accordance with World Vision financial policies and procedures in areas such as budget, cash management, recording, documentation, financial reporting and other financial related areas.

**Personal Profile:** Requires part qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ACA) or Chartered Institute of Management Accountants of UK (CIMA), Certified Management Accountants of Sri Lanka (CMA), Association of Accounting Technicians of Sri Lanka (AAT). A minimum of 2-5 years of experience in finance, preferable with 2 years experience in a reputed audit firm. Should be able to work with minimum supervision in a team environment. Hands on experience on a computerized Accounting package will be as added advantage. Should be familiar with MS Excel & Word. Be a good communicator when sorting matters and obtain approvals, advices from superiors accordingly.

**Human Resources Assistant @ Northern Zone-1**

The purpose of this position is to provide a wide range of Human Resources support to World Vision Northern Zone in line with the organizations policies and procedures. To develop and maintain effective information systems. To assist in recruitment, orientation & induction, staff devotions, attendance, leave records, personal files etc.

Requires emotional maturity and ability to deal with matters of strict confidentiality. Must have strong Christian commitment, be able to demonstrate sound judgment and initiative with little guidance, ability to commit to ethos, core values and mission statement of World Vision International. Requires experience in working with a cross-cultural environment with good communication and negotiation skills. Must have operational knowledge in word processing, spread sheet and computer aptitude.

World Vision Lanka offers attractive remuneration package, based on individual competence and skills. If you are a person who meets the above requirements and are willing to work with the poor and the oppressed, sometimes in difficult conditions, Please apply within a week of this advertisement with your CV, contact No., names and addresses of three non-related referees to:

**World Vision Lanka,**
Human Resources Department (Northern Zone),
227, 3rd Cross Street, Jaffna.
Fax : 0212228223

# தங்கத் தலைமகனை தமிழினம் தலைநிமிர்ந்து வாழ்த்துகின்றது !



(46186)

வலம்புரியின் முத்தென வையகம் வந்தாய்
வாகுபெற தாய் மடியில் தவழ்ந்துமே வளர்ந்தாய்
கோமானே பிரபாகரன் எனும் நாமம் பூண்டாய்
தலம் யாவும் கொண்டாடும்
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவனாகத்
தகைமை பெறு கீர்த்தி பலவுங் கண்டாய்
நிறை புகழோடகவை ஐம்பத் தொன்று
நிறைகுடம் போல் இறை அருளாய் நீடுழி வாழி!!!

**உழவு இயந்திர உரிமையாளர் சங்கம், மானிப்பாய்ப் பிரதேசம்.**

## வவுனியாவில் மாவீரர் தின நிகழ்வு

வவுனியா.நவ,26

வவுனியாவில் மாவீரர் தின ஆரம்ப நாள் நிகழ்வு நேற்று வவுனிய ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆரம்பமானது. வவுனியா மாவட்டத்தின் மாவீரர் தின நிகழ்வுகள் ஈச்சங் குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறை யினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீ ழத் தேசியக் கொடியினை மாவீரர் மேஜர் ஜீவா வின் தந்தையார் சி.சிவஞானம் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை மாவீரர் வீரவேங்கை மலர வளின் தாயார் திருமதி. ஜே.சரஸ்வதி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக் கம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொது அமைப்பு களின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக் கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருக்கும் ஈச்சங்குளம் பகுதியில் இராணுவத்தினர் பெருமளவாக குவிக்கப்பட்டு இருந்தனர். (ஒ-164)

# வெற்றித் திருமகனே நீரு வாழ்க!

51 ஆவது



அகவையில்

தேசியத் தலைவர் மாண்புமிகு

## வே. பிரபாகரன் அவர்கள்

கார்த்திகை மாதம் மலர்ந்த கரிகாலனே
தமிழர் கனவை நனவாக்க உதித்த தமிழ்வேந்தா
தமிழ் உந்தன் மூச்செனின் தமிழ் என்றும் உன் அணி
படைகள் பல உருவாக்கி பற்பல சாதனை நிலைநாட்டி
பாரில் தமிழன் தலை நிமிர வைத்த தலைவா
அகவை ஐம்பத்தொன்றில் அகிலம் போற்ற
வெற்றித் திருமகனே வாழ்க பல்லாண்டு! வாழி!

**ஊழியர் தொழிற்சங்கம்,**
**(46364) வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை.**

# தானைத் தலைவனே நீவிர் வாழ்க !



ஆர்ப்பரிக்கும் கடற்கரை மண்ணிலே – கார்த்திகை
மாதத்துக் கதிரவனாய் வல்வையில் உதித்தவனே
அடிமைப்பட்டிருந்த தமிழ் இனத்தின் – அடிமைத்
தளை அறுக்க தனி ஒரு படைதனை அமைத்தவனே
சந்திக்க வருகின்ற பகை அனைத்தையும் – ஒரு கணம்
சிந்திக்க வைத்த எங்கள் சரித்திர நாயகனே
சிங்களப் படைகளைச் சங்காரம் செய்ய – செங்களம்
தனிலே இங்கிதமாக ஆயுதம் ஏந்தியவனே
செந்தமிழ் வீரனாய் சீறிடும் வேங்கையாய் – தமிழின
விடிவிற்காய் தரணி போற்ற வாழ்பவனே
அடக்க வரும் எதிரியை அடங்க வைத்து – புறமுதுகு
காட்டி தலை தெறிக்க ஓட வைத்தவனே
இமயமலையை விட உயர்ந்தவனே ஏழுகடல்களை விட
புகழால் பரந்தவனே – எத்தனை அகவைகள்
நீவிர் எடுத்தாலும் நீதி, நிர்வாகம், அரசியல் அனைத்தையும்
நிலை நாட்ட தமிழ் அன்னை பெற்றெடுத்த தானைத் தலைவனே
தமிழீழ வான் பரப்பில் உதித்திட்ட சூரியனே, நீவிர் பல்லாண்டு வாழ்க!

(43187)

**பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்கள்,**
**காரைநகர் பனை-தென்னை வள அபிவிருத்திச் சங்கம்.**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Suntel தொலைபேசி இஷணப்பு விற்பனைக்கு உண்டு. 0773126960, 0777 222519. (43047)

Jx - xxxx தொடர் இலக்கமுடைய சொந்தப் பாவனையிலுள்ள ஓட்டோ உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No. 077 9024387. (43198)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

35 நாள்கள் நிறைந்த, பூச்சி நீக்கப்பட்ட சுத்தமான ஜேர்மன் செப்பட் அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. 27.11.2005 ஞாயிற்றுக்கிழமை பார்வையிடவும். தொடர்பு: மார்க்கண்டு M.S. லேன், கோண்டாவில் கிழக்கு. T.P.No. 0776258115 (43178)

சுத்தமான Dobermann Pincher, Dachshund நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43167)

## காணி விற்பனைக்கு

கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் இரண்டு பரப்பும் 1½ குழியும் கொண்ட கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.No 0776701467. (43183)

## வீடு,காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இல.98, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடியில் அமைந்துள்ள 2½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 021 222 6849 1-416-895-2060 அல்லது Veedu.clock tower @ hotmail.com (43074)

பெரியவிளான் யுவானியார் கோயிலுக்கு அருகில் தெல்லிப்பழை வீதியில் திரேசம்மா பொன்ராசாவின் 2½ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779604197. (43205)

## கடை வாடகைக்குண்டு

இல.978, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடியில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.No. 4590462 (43179)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 240/- வியாபாரிகளிற்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, விஜயகுமார் குளப்பிட்டி றோட். ஆனைக்கோட்டை. T.P.No.222 2867, 222 3529 (43044)

புறொயிலர் 1Kg 160/, சுத்தம் செய்தது 1Kg 250/, கல்பேட் கோழியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தாசன் கோழிப்பண்ணை, 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (43014)

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43166)

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (43207)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 28.11.05 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும், உடுவில் பாம் சென்ரர் - உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (43168)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு,வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (43181)

## சேவை

55000 அமெரிக்க விசா விண்ணப்ப முடிவு திகதி 04-12-2005 தாமதிக்காமல் விண்ணப்பிக்க. முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பாஸ்போட் அளவு போட்டோவுடன் ரூபா 400/- இற்கான மணியோடரை அனுப்புங்கள். குடும்பமாயின் மனைவி, பிள்ளைகளின் தனிப்போட்டோக்கள், பெயர், பிறந்த திகதிகளையும் அனுப்பவும். Penquin Book Shop, $B_2/F_{23}$ Blomendhal Flats, Kotahena. 0773081764 (சி/46306)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில் ) (46278)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி (பஸ்தரிப்பிற்கு அருகில்), யாழ்ப்பாணம் T.P.No . 021-222 9154, 0777 - 593722, 077 6991899. (43206)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சித்திர கௌரி கோபாலகிருஷ்ணன் என்பவருடைய தே. அ. அ.(இல. 576350627V) யாழ். பஸ் நிலையப் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இராஜ வீதி, முருகன் கோயிலடி, திருநெல்வேலி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் T.P.No . 0776985392.

(43200)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

"Nursery School " Annual Fee 2000/- New Admissions to Head teacher **Vigneswaran** Archery 426 (302), K.K.S. Road, Jaffna. "The Royal is the Best" (43195)(21.17.46)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்.மாவட்ட நூலக விழிப்புணர்வு நிறுவனம் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தும் பொது அறிவுப் போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என நூலக விழிப்புணர்வு நிறுவன செயலர் அறிவித்துள்ளார். (எ-204)

## கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. புதியகட்டடத்திற்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினிசிதம்பரநாதன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 80 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (3-111)

## விற்பனைக்கு

யாழ்.நகரில் பிரபல்யமாக இயங்கி வரும் கணனி நிறுவனம் ஒன்று இயக்க நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776331519

நேரம். 3 p.m-6p.m.

(21.17.46) (43208)

## வேலையாள் தேவை

**கோயிலில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய இருவர் தேவை.**

**தொடர்பு: 0779680036**

(43056) (21.34.15)

## சலுகை முடிவு

28.11.2006 முதல் SAAMSTECH இன் ஆங்கில நேரடிவகுப்புக்கான கட்டணம் ரூ.6000/- ஆக மாற்றப்படுகிறது

## சலுகை

27.11.2005 வரை ஆங்கில நேரடிவகுப்புக்கு சலுகைக்கட்டணம் ரூபா 3000/- மட்டும்.

இதில் முதல் 100 பதிவுகளுக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள் மற்றும் CD முற்றிலும் இலவசம்

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna. 4591571

233/4, Kasthuriar Rd, Jaffna. 2229505

## பணிநிலை வேண்டுகை

### செஞ்சோலை

கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் சுயவிவரத்தினை 02.12.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலைகள்**

01. ஆசிரியர்கள்
   1.தமிழ்
   2.கணிதம்
   3.விஞ்ஞானம்
   4.வர்த்தகம்
   5.நடனம்
   6.சங்கீதம்
   7.சமூகக்கல்வி
   – *01. க.பொ.த.(சா/த) தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி*
   *02. க.பொ.த.(உ/த) துறைசார் பாடங்களில் திறமைச்சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.*
   8.நூலகர் – *நூலக விஞ்ஞானச் சான்றிதழ்/முன்அனுபவம் விரும்பத்தக்கது*

02.களஞ்சியப் பொறுப்பாளர் – *க.பொ.த.(சா/த) வர்த்தகம், கணிதம் திறமைச்சித்தி அடைந்திருப்பதுடன் க.பொ.த.(உ/த) சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது.*

03.எழுதுநர் – *க.பொ.த.(உ/த) தமிழ் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்*

04.வரவேற்பாளர் – *க.பொ.த.(உ/த) தேர்ச்சியடைந்திருப்பது விரும்பத்தக்கது. (வயதெல்லை 21இற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இல.1,2,3)*

05.வீட்டு மேற்பார்வையாளர் – *க.பொ.த.(சா/த) தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும். (தாதியர் சேவை அனுபவம் உடையவர்களாக இருப்பின் விரும்பத்தக்கது) வயதெல்லை 28 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.*


06.இரவுக் காவலாளி – *தரம் 08 இற்கு மேல் கல்வி கற்றிருக்க வேண்டும். வயதெல்லை 45 இற்கு மேல் இருத்தல் வேண்டும்.*

- குறிப்பு: இருப்பிட, உணவு வசதிகள் உண்டு.
- விண்ணப்பம் செய்தவர்கள் சகல தகைமை ஆவணங்களுடனும் சமுகமளிக்கவும்.
- விண்ணப்பம் செய்யத் தாமதமானவர்கள் நேர்முக நாளில் சமுகமளிக்கவும்.
- ஊதியம் நிதித்துறையின் ஊதியத் திட்டத்தின்படி வழங்கப்படும்.
- நேர்காணல் நடைபெறும் இடம், திகதி, 04.12.2005 முற்பகல் 10 மணி, கிளிநொச்சி மத்தியகல்லூரி.
- வேண்டுகைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

**விளம்பர இலக்கம்: 2759**

**C/o. உதயன், யாழ்ப்பாணம்.**

(சி-46372) (21.42.46.17)



# 51 ஆவது அகவையில் எங்கள் தானைத் தலைவனே வாழி! வாழி!!



கார்த்திகைப் பூக்களின்
காந்த முகமே வாழி!
பாய்ந்திடும் புலிகளின்
படையுகமே வாழி!

தமிழ் மொழியின்
தங்கப் பூவே வாழி!
தமிழீழப் பூமியின்
தாக நதியே வாழி!

வடக்குத் தமிழனின்
வடக் கயிறே வாழி!
கிழக்குத் தமிழனின்
அடை மழையே வாழி!

உலகத் தமிழனின்
ஒளி விளக்கே வாழி!
இளைய தலைமுறையின் - தலைவனே
பிரபாகர அண்ணனே வாழி!

- வேங்கை மாறன் -



முச்சக்கரவண்டிச் சங்கமும்
தனியார் சிற்றூர்திச் சங்கமும்
தென்மராட்சி.

(43215)(32-42-16-46)





## 51 ஆவது அகவை காணும் உலகத் தமிழரின் ஒளிவிளக்கு

அகிலம் போற்றும் தலைவனாம்
ஆதவன் முகத் தாமரையான்
இவ் வையகம் உள்ளவரை
ஈழத் தமிழர் நெஞ்சங்களில்
உரிமைக்காகப் போராடும் - கரிகாலன்
ஊரதும், உறவதும் - பிரிந்தாய்
எல்லோரும் வியக்கும் வண்ணம்
ஏற்றமிகு அரசமைத்தாய்
ஐயத்துக்கு இடம் தராமல்
ஒரு அண்ணன் பிறந்தான் வல்வையிலே
ஓங்கும் தமிழை ஒளிர வைத்தான்
ஔவையாரும் இன்று இருந்திருந்தால்
நின் புகழ் பாடி மகிழ்ந்திருப்பாள். இன்று போல்
என்றும் பல்லாண்டு காலம் வாழ்க!

ஆளுகை: எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகம்
சாந்தை, பண்டத்தரிப்பு.

(43216) (39-32-15-19)


## குடிதண்ணீர் கிணற்றினுள் வெள்ளநீர் புகுந்தது சில்லாலையில் பாதிப்பு

வலி.தென்மேற்கு,நவ.26

சில்லாலை சாந்தைக் கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கென பயன்படுத்தப்பட்டுவரும் நல்ல தண்ணீர்க் கிணற்றில் வெள்ளநீர் புகுந்துள்ளது.

இதனையடுத்து, இந்தக் குடிதண்ணீர் திட்டப் பாவனையில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வது சுகாதாரப் பகுதியினரால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பொதுசுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன் சம்பந்தப்பட்ட கிணற்றை நேரடியாகப் பார்வையிட்டு இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டார்.

மேற்படி கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மாற்று ஏற்பாடு செய்வதற்கு வலி.தென்மேற்கு பிரதேச சபை ஏற்பாடு செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(எ-135)

## சித்த ஆயுள்வேத ஆஸ்பத்திரி மூன்று தினங்கள் இயங்குகிறது

வலி.தென்மேற்கு, நவ.26

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த 19ஆம் திகதி தொடக்கம் வாரத்தில் மூன்று தினங்கள் செயற்பட்டுவருகின்றது.

செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் இந்த வைத்திசாலையில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடம் மார்ச் மாதத்தில் திறக்கப்பட்ட இந்த வைத்தியசாலை வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக கடந்த இரு மாத காலமாக இயங்காத நிலையில் இருந்துவந்தது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரியும், இப்பகுதி பொது நிறுவனங்களும் விடுத்த வேண்டுகோளை அடுத்து கடந்த 19 ஆம் திகதி முதல் இது மீண்டும் செயற்பட்டு வருகின்றது.

(எ-135)


## பிரின்ஸெஸ் ஒ(f)ப் வேல்ஸ் -வைத்தியசாலை-

சேவை மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்ல எங்களுக்குப் பின்வரும் சேவைகளுக்கு தகுதியானவர்கள் தேவை

- Physician/Consultants (MBBS) [பௌதிகவியலாளர்கள்/ ஆலோசகர்கள்]
- Eye Specialist [கண் நிபுணர்]
- Pharmasist (Full Time)
- Accountant
- அம்புலன்ஸ் டிரைவர்
- Sisters/Nurse & Male Nurse
- Senior Registered Nurse
- Experienced Computer Operator
- Pharmacist

திங்கள் (28.11.2005) மற்றும் செவ்வாய் (29.11.2005) ஆகிய இரு தினங்களிலும் நீரிழிவு நோய்க்கான பரிசோதனையும் மருந்து வகைகளும் இலவசமாக வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் தங்களது கல்வி மற்றும் அனுபவம் சான்றிதழ் பிரதிகளுடன் 30.11.2005 அன்று முற்பகல் 10 மணிக்கு சமுகம்தரவும்.

வைத்திய இயக்குநர்,
132, கச்சேரி நல்லூர் சாலை, யாழ்ப்பாணம்.

(43199)



## A/L வெளிவாரி தனிப்பட்ட பரீட்சை கற்கை நெறி 1996 - APRIL

★ 21 வயதுக்கு மேற்பட்ட எவரும் இக்கற்கை நெறியில் பங்குகொண்டு க.பொ.த. உயர்தரச் சான்றிதழைப் பெறமுடியும்.
★ O/L சித்தி அவசியமில்லை.
★ பாடங்கள் :- பொருளியல், அளவையியல், புள்ளிவிவரவியல் , தமிழ், புவியியல், இந்து நாகரிகம், நாடகமும் அரங்கியலும், சங்கீதம், மனைப்பொருளியல், நடனம்.
★ சனி, ஞாயிறு கிழமை நாள்களில் வகுப்புகள் பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.
★ பரீட்சை : பதிவு 28.11.2005 திங்கள் 3 மணி
★ வகுப்புகள்: 05.11.2005 திங்கள் பி.ப.3 மணிக்கு ஆரம்பமாகும்.
★ மேலதிக விவரங்கள் : DMI

Stanly Road, Jaffna.
T.P.: 0773548478 / 0777036932 (43194)(32-19-15)


## மரண அறிவித்தல்கள்

### வைத்தி இராசையா



வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்தி இராசையா நேற்று (25.11.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ.கிருஷ்ணநாதன் (மகன்).

மணியாறன் ஒழுங்கை,
5 ஆம் வட்டாரம், வேலணை.

(43202)(26-32-15-19)

### செல்லையா மயில்வாகனம்



கோண்டாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மயில்வாகனம் அவர்கள் 24.11.2005 வியாழக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னக்குட்டி தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற சிவனாம்பிகை (பருத்தித்துறை) அவர்களின் அன்புத் துணைவரும் மகேந்திரன் (கனடா), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, அன்னம்மா, கனகலிங்கம், சேனாதிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கார்த்திகேசு, காலஞ்சென்ற சரவணமுத்து, க.அன்னபாக்கியம், சே.செல்லக்கண்டு ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ்வரி மகேந்திரன், தெய்வநாயகி யோகேந்திரன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மேற்படி முகவரியில் உள்ள இல்லத்தில் நாளை (27.11.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
ம.மகேந்திரன் (முன்னாள் மருவரி உத்தியோகத்தர் - மன்னார்),
ம.யோகேந்திரன்,
சே.வேல்முருகன் - பெறாமகன்
குடும்பத்தினர்.

முகவரி:
குளங்கரை ஒழுங்கை,
அம்மன் கோயிலடி,
கோண்டாவில்.

(43212)(32-19-15)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி அன்னலட்சுமி பாலசுப்பிரமணியம்

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி பாலசுப்பிரமணியம் November மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து பாலசுப்பிரமணியம் (உதவித் தொழில் ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் பாலபாஸ்கரன் (கவிஞர் பாஸ்கி -கணக்காளர் Canada), பத்மபாஸ்கரன் (உரிமையாளர், Skywings Limited London), டாக்டர் பாஸ்கரன் (London), சத்தியபாஸ்கரன் (சமூகசேவையாளர் London), பவானி (London), நந்தினி(London), நித்தியபாஸ்கரன் (பொறியியலாளர் - உரிமையாளர், BDL நிறுவனம் - London) ஆகியோரின் அருமைத் தாயாரும் தேவமனோகரி (Canada), டாக்டர் செல்வராணி (London), வசந்தா (London), குகதாசன் (கணக்காளர் - உரிமையாளர் Kugan & Co - London), சிவாஜி (கணக்காளர் - London), கௌசல்யா (London) ஆகியோரின் மதிப்புக்குரிய மாமியாரும் கவிதா, கல்யாணி, சிந்து, இந்து, காயத்திரி, லவன், அர்ச்சனா, பார்த்திபன், லஷ்மி, ஜானகி, பிருந்தா, வித்தியா, கோகுலன், ராகுலன், பாகுலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை Elmcroft Community Centre, London Road, Cheam இல் முற்பகல் 10 மணிமுதல் 11.30 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணிவரை Mordern Cemetery Gaath Road, London இல் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

5 MYRTLE GROVE
NEWMALDEN
SURREY KT3 3LF
UK.
+44 2039492495.

'அன்பாலயம்'
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
021-2263218

## கனகசபாபதி ஞானலட்சுமி (ஆச்சி)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி ஞானலட்சுமி 24.11.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -அமிர்தரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபாபதியின் (நில அளவையாளர்) அன்பு மனைவியும் உதயகுமரன் (லண்டன்), வானதி (ஆங்கில ஆசிரியர், யா/ ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி சிவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான திருமதி உமாமகேஸ்வரி, ஞானேஸ்வரன் (மலேசியா) மற்றும் புவனேந்திரன் (கனடா), காலஞ்சென்ற திருமதி ஜெயராணி (கனடா) ஆகியோரின் சகோதரியும் சிறி தமயந்தியின் (சீத்தா, லண்டன்) மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு, (43221)
ஊரெழு. (30-34-46)

தகவல்:
க.வானதி (மகள்).

## வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதவிவரங்களை அனுப்பிவைக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.26

பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களின் கட்டுமானங்களுக்கு வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களின் விவரங்கள் யாழ். அரச அதிபரால் கோரப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையாலும் வெள்ளத்தாலும் பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்படி திணைக்களங்களுக்கான சேத விவரத்தையும் அவற்றைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகளையும் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (எ-202)

## மானிப்பாயில் தராசுகளுக்கு முத்திரையிடும் பணி

நவாலி, நவ.26

மானிப்பாய் பிரதேச சபையில் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு 2006ஆம் ஆண்டிற்குரிய முத்திரையிடும் பணி கடந்த 21 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன் இறுதி நாள் எதிர்வரும் 28 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் தமது நிறுத்தல் அளவை உபகரணங்கள் மற்றும் நிறுக்கும் கருவிகள் என்பவற்றிற்கு காலை 9 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்குமிடையே முத்திரையிட்டுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-100)

## மாதகல் செபஸ்தியார் வீதி பலத்த சேதமடைந்த நிலையில்

வலி.தென்மேற்கு,நவ.26

மாதகல் செபஸ்தியார் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் வெள்ளநீர் தேங்கி நிற்பதாகவும் -

மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறப்பட்டது.

இவ்வீதியைப் புனரமைப்பதற்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - இங்குள்ள மக்கள் கருத்துத் தெரிவித்தனர். (எ-135)

## குருநகரில் பலப்படுத்தப்படும் காவலரண்

குருநகர்,நவ.26

குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் மகப்பேற்று பணிமனையின் முன்பாக அமைந்துள்ள இராணுவக் காவலரண் இராணுவத்தினரால் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இங்கு தங்கியுள்ள இராணுவத்தினர் காவலரணின் தெற்குப் பக்கத்தில் மிக உயரமான கண்காணிப்பு அரணை தற்போது புதிதாக அமைத்துள்ளனர். (எ)

## நுளம்புத் தொல்லை

வலி.தென்மேற்கு, நவ.26

வலி.தென்மேற்குப் பகுதியில் நுளம்புத் தொல்லை வழமையைவிட அதிகரித்துக் காணப்படுகிறது.

தற்போது பெய்துவரும் மழையையடுத்து இப்பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நுளம்புக் கடியினால் மக்கள் பாதிப்படைந்து வருவதுடன் காய்ச்சல் மற்றும் மலேரியா நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (எ-135)


Jayoda ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் 2 8 9 7 6 8 18

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,18,83,350/- வெல்லப்படவில்லை

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 0 | 1,18,83,350/- | 0 |
| [illegible] | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| [illegible] | 08 | 80,000/- | 4,00,000/- |
| [illegible] | 75 | 5,000/- | 3,75,000/- |
| [illegible] | 775 | 500/- | 3,87,500/- |
| [illegible] | 7,608 | 50/- | 3,84,400/- |
| [illegible] | 7,608 | 50/- | 3,84,400/- |
| [illegible] | 09 | 5,000/- | 45,000/- |
| [illegible] | 76 | 1,000/- | 76,000/- |
| [illegible] | 770 | 100/- | 77,000/- |
| [illegible] | 7,627 | 20/- | 1,52,540/- |
| | | [illegible] | 38,55,860/- |
| [illegible] | 08 | 76,328/- | 6,07,000/- |
| [illegible] | | | 42,62,260/- |

ரூ. 1,20,97,225/-

| | |
|---|---|
| [illegible] | 7312684-1-77 |
| [illegible] | 7312990-0-05 |
| [illegible] | 7318090-2-26 |
| [illegible] | 7313393-0-72 |
| [illegible] | 7320294-5-04 |
| [illegible] | 7312403-9-61 |
| [illegible] | 7318643-0-09 |
| [illegible] | 7314169-5-39 |



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்

இலவச பொது மருத்துவ முகாம்

காலம்: 27-11-2005 (ஞாயிறு)
காலை 8.30 மணிமுதல்
We Serve இடம் : நவாலி சென். பீற்றேர்ஸ் பாடசாலை

லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரெத்தினம் (M.B.B.S) (முன்னாள் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

லயன் வைத்திய கலாநிதி K.ரெத்தினசிங்கம் (M.B.B.S) (சிரேஷ்ட வைத்திய அதிகாரி - யாழ். போதனா வைத்தியசாலை)

வைத்திய கலாநிதி சிவராணி சிவஜோதி (M.B.B.S) (மாவட்ட வைத்திய அதிகாரி - அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழை)

கண் பரிசோதனை மேற்கொள்பவர்கள்
யாழ். பிரபல துஷா
பல் மூக்குக் கண்ணாடியக
ஸ்தாபனத்தினர்.
(இல.544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)

கண் பரிசோதனைக் கேற்ப வசதி குறைந்தவர்களுக்கு மட்டும் மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு:
நவாலி/ ஆனைக்கோட்டை/ மானிப்பாய் மக்கள் பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

லயன் எஸ்.ஸ்ரீனிவாசன்
கழகத் தலைவர்.

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
சேவை இணைப்பாளர்/ கழக செயலாளர்.

(43214) (30-34-46)


# கண்ணீர் அஞ்சலி

23.11.2005 அன்று இறைபதம் எய்திய எமது சக வர்த்தகரான

## சிங்கராசா இராசேந்திரம் (துரை)

*(கிங்ஸி எலெக்றோனிக்ஸ்)*

*அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**வர்த்தக சங்கம்**
**மல்லாகம்.** (சி-46393)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## கதிரேசு மகாலிங்கம்

தோற்றம் 29-02-1937 மறைவு 27-10-2005

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்டு 26.10.2005 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.11.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (43220) (24)

சம்பியன் லேன்,
கொக்குவில்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## *பஸ்ரியாம்பிள்ளை பீற்றர்பிள்ளை*

(இளைப்பாறிய அதிபர், *சிறிய புஸ்ப மகளிர் கனிஸ்ட வித்தியாலயம், கரம்பன்*)

நாரந்தனை மத்தியைப் பிறப்பிடமாகவும் முத்தையன்கட்டில் தற்காலிகமாக வசித்தவருமாகிய பஸ்ரியாம்பிள்ளை பீற்றர்பிள்ளை (நாரந்தனையில்) நேற்று (25.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்திரியாம்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் மேரி திரேஸாவின் (பேபி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான போல், யோசப், அம்புறோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரனியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2005) சனிக்கிழமை நாரந்தனை இல்லத்திலிருந்து பி.ப 3.30 மணிக்கு புனித சம்பேதுரு சம்பாவலு ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை மத்தி,
ஊர்காவற்றுறை. (43211) (24)

தகவல்:
மனைவி.

## செபஸ்ரி சந்தியோகு

(மாணாக்கர்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரி சந்தியோகு (அந்தோனிப்பிள்ளை மாணாக்கர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (24.11.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரினின் அன்புக் கணவரும் யேசுராசாவின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேந்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/2, கொண்டடி வீதி, (43218) (24)
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
சந்தியோகு யேசுராசா (மகன்).

# தமிழ்த் தாயின் மகரந்தமணி பிரபா



தமிழ்த் தாயின் மடியில் தவழும் அக்கினிக் குழந்தை பிரபா
சத்தியத்திற்காய் மரணித்த மாவீரரின் இதயம் பிரபா
இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களின் ஒருமித்த குரல் பிரபா
ஆற்றல் மிகுபடை அன்பு தந்தரும் மக்கள் படை மோதி அழிக்க
முடியாது அரண் உடைய ஆண் புலி பிரபா செல்லுங்கள் -
வீழ்த்துங்கள் - வெல்லுங்கள் என்ற வழிகாட்டியானவர் பிரபா பல
வீரர்களின் குருதிகளால் எழுதப்படும் காவியத் தலைவர் பிரபா
தமிழ் மக்களின் இலட்சியப் பயணத்தில் ஊன்றுகோல் பிரபா.
தமிழ் தந்த வீரத்திருமகன் பிரபா
வீரமகன் உம்மை வாழ்த்திட மொழியில்லை ஆயினும்
வாழ்த்துகிறோம் எம் மண்ணை மீட்டிடவே நாம் எழுச்சியுடன்
வாழ்ந்திடவே மலர்ந்திட்ட மன்னவனே பல நூறாண்டு நீர்
வாழ்ந்திடவே வாழ்த்துக்கள்.

(சி-46399)
(54-11-34)

யாழ். மாவட்டம்,
பெண்கள் அமைப்பு.

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,
நவ. 26

ஹற்றன் நஷனல் வங்கி நடத்திய பாடசாலை அணிகளுக்கிடையேயான கூடைப் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

**ஆண்கள்** -
காலை 7.30 மணி சென்.ஜோன்ஸ் கல்லூரி (சிவ ப்பு) எதிர் யாழ். மத் திய கல்லூரி.

**பெண்கள்** -
காலை 8.30 மணி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

(190)





வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு
55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட வீசாவுக்கான
**திருமுருகனின் விசேட விலைக்கழிவுடன்**
**உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிசீலிக்க!!!**

முடிவுத்திகதி இன்னும் சில தினங்கள் மட்டுமே

தொடர்புகளுக்கு
**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் கனகம்மா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கனகம்மா நேற்று (25.11.2005)வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலசரஸ்வதி (திருகோணமலை), விக்கினேஸ்வதி, கனகேந்திரன் (கனடா), ரதிதேவி, தவராஜலிங்கம் (கனடா), விநேசன், விவேகானந்தன் (ஜேர்மனி), பரமானந்தன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் மகாதேவன் (மருந்தாளர், நயினாதீவு), சரஸ்வதி(கனடா), தயானந்தம்(முகாரி வ.பி.போ.ச.), இன்பவதனா (கனடா),சுபோதினி (ஜேர்மனி), புனிதமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மேனகா(விலங்கு மருத் துவர்), உமாகாந்தன் (பொறியியலாளர்), அனுஷா (அமெரிக்கா), நிருஷா(கனடா), ரமேஷ்(கொழும்பு), றெஜிதா, இராஜரூபன், யசிதா, துளசிகரன், ஜெயந்தி (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), திலக்ஷி (முகா மைத்துவ பீடம், ஸ்ரீஜெயவர்த் தனபுர) டிலானி, நபிலானி, சுஜிந்தன், நிரோசன், தினோஜன், வினோஜன், கினோஜன், தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரணவன், யுக்சினி,திவ்யன், அரவிந் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.11.2005)சனிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் இளங்காட்டு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
(43227)
(54-11-34)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி கலைமகள் மகாலிங்கம்



சரவணை கிழக்கு, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைமகள் மகாலிங்கம் அவர்கள் 25.11.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார்தம்பையா மாணிக்கம் அவர்களின் அன்பு மகளும் நாகலிங்கம் -தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கண்ணுதல், மயூரன், ஜெயந்தி, வசந்தி, சுகந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல.18, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 077 9151160*
(43229)
(54-11-34)
தகவல்:
**நா.மகாலிங்கம்**
**(கணவர்).**

### சின்னத்துரை இராஜரட்ணம்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்துரை இராஜரட்ணம் என்பவர் பருத்தித்துறையில் 24.11.2005 அன்று காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான சின்னத்துரை பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும் வண்ணமயிலின் அன்புக் கணவரும் செல்வரத்தினம், சோதிப்பிள்ளை, நவரட்ணம் மற்றும் காலம் சென்றவர்களான சிவலிங்கம், பூமணி, சிங்கவாகனம், செல்லத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சங்க ரப்பிள்ளை, கண்மணி, ஆகியோரின் அன்பு மருமகனும் அருங்கிளி, தங்கக்கிளி, மங்களகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜயா (சுவிஸ்), விஜயராணி (கிளிநொச்சி), வெள்ளிமயில் (ஜேர்மன்), சிவசுப்பிரமணியம் (ஜெயபுரம்), முருகையா (கனடா), ரவிச்சந்திரன் (வவுனியா வளாகம்), செல்லக்கிளி (முல்லைத்தீவு), சிவம் (பிரான்ஸ்), பிரகாஸ் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் யேசுரட்ணம் (சுவிஸ்), குணபாலசிங்கம் (கிளிநொச்சி), கீரன் (முல்லைத்தீவு), மலைமகள் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனுஷா, பானுஷா, ஜெரித், யதுஷா கீர்த்தி பானு, தனுசன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மருதடி பருத்தித்துறையிலுள்ள (டிப்போவுக்கு அருகாமை) துரைலிங்கம் (துரை) என்பவரின் இல்லத்தில் 26.11.2005 (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறையிலுள்ள சுப்பர்மட இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி(டிப்போவுக்கு அருகில்)
பருத்தித்துறை.
தகவல்:
ஜேசுரட்ணம்(மருமகன்)


வெளிக்களப் போதனாசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
த. தவசேகர்
B.Sc., P.G.D.E
★பொது அறிவு
★பொது உளச்சார்பு
D.M.I யாழ். நகரில் சனி2-6, திங்., செவ்., புத. 4-6 நேரங்களில் வகுப்புகள் நடைபெறும்.
இப்பரீட்சைக்கான வழிகாட்டி நூல் விற்பனையாகின்றது.
(43225)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சீதேவிப்பிள்ளை



காரைநகரைப் பிறப்பிடமாகவும் நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சீதேவிப் பிள்ளை 23.11.2005 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி, கமலேஸ்வரன் (கனடா), சுகன்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமணி, நகுலேஸ்வரி, வின்சன்ற் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். வதனி (பின்லாந்து), றகு (J.T.I), றாகவன், சசி, சித்திரா, ரூபா, ரிஷி, தர்ஷன், சுபாங்கன், ஜெனோஷன், கிறுஷாளன் ஆகியோரின் பேர்த்தியும் சஜிபனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலடி,*
*நவாலி தெற்கு, மானிப்பாய்.*
(43226)
(54-11-34)
தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### செல்வநாயகம் திருச்செல்வம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் திருச்செல்வம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இ. செல்வநாகயத்தின் அன்பு மகனும் விவியனின் அன்புக் கணவரும் Dayan, Anuk, Gihan ஆகியோரின் அன்புத் தந்தையும் அபிராமசுந்தரி, சோமேஸ்வரி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரா தாமோதரம்,Geoff Nash ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கண்டியில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*
(சி-46401)
(54-11-34)
தகவல்:
**சகோதரி சுந்தரி தாமோதரம்.**

### திருமதி தங்கராசா இராசமணி

துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த தங்கராசா இராசமணி 25.11.2005 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கராசா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இ. யோகாம்பிகை (யா/வடமராட்சி ம. மகளிர் கல்லூரி, யா/வதிரி திருஇருதயக் கல்லூரி பகுதிநேர ஆசிரியர்), திருமதி இ.சிவாம்பிகை ( ஜேர்மனி), திருமதி இ.இளவதனா (லண்டன்), அமரர் த. செல்வாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் ந. இராஜகோபால், இராஜேந்திரன், இராஜசேகர் ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2005) மு.ப. 10 மணியளவில் மூத்தமகளின் இல்லத்தில் (இ.யோகாம்பிகை) நடைபெற்று, சோனப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*புதுத்தோட்டம் வீதி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*
(சி-46402)
(54-11-34)
தகவல்:
**ந. இராஜகோபால்**

## துயர் பகிர்கின்றோம்

எமது அன்புப் பெறாமகன்
**வை. குமரேசசர்மா** அவர்களின்
பாசமிகு மாமியார்
**ஸ்ரீமதி இராஜஇராஜேஸ்வரி அம்மா**
**சண்முகநாதக் குருக்கள்** (லண்டன்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

18,துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(43224)
(54-11-34)
**க.மகாகணபதீஸ்வரக் குருக்கள்**


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதியில், சிவதொண்டர் நிலையத்திற்கு அருகில் 5 பரப்புக் காணி இரு வழிப்பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு:**
0773242872

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று மட்டும் **மஜா** விக்ரம், அஸின், வடிவேல், மணிவண்ணன் நடித்த
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30 , 6.30
28.11.2005 முதல் **மழை**

**நாகம்ஸ்** சுன்னாகம்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00,
அடுத்த வெளியீடு - அர்ஜுன் நடித்த
**ஆணை**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**மனோகரா** யாழ்ப்பாணம்



# வீதிச்சோடனையில் ஈடுபட்டவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

யாழ்ப்பாணம்,நவ.26

நீர்வேலி வடக்கு, கரந்தன் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்தவரான என்.நிரூபன் (வயது-22) என்பர் காயமடைந்தார்.

மாவீரர் தினத்தையொட்டி வீதியில் அலங்கரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இவர் மீது மோட்டார் சைக் கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் துப்பாக் கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

(ஒ-13-14-15-154-203)

## அறநெறி மற்றும் ஆங்கில பரீட்சைகள்

உவா வெல்லஷ பல்கலைக்கழக அனுமதிக்கான ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை இன்றும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைஆகியவற்றில் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு பரீட்சைகளில் தோற்றும் பரீட்சார்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று உதவிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ-11-190)

# ஜனாதிபதி மஹிந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"யுத்தம் என்பது எமது பாதை அல்ல அரசியல் பேச்சுக்கு ஊடாக சமாதானத்தை நிலைநாட்டுவதே எமது திட்டம்.

"மூடிய பேச்சுகளுக்குப் பதிலாக, திறந்த - ஒளிவுமறைவற்ற - செயற்பாட்டு முறையுடன் கூடிய - கண்காணிப்பு அமைப்பின் ஊடாகப் பல தரப்புப் பேச்சுகளை முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம்." - என்று அறிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவரது நேற்றைய கொள்கை விளக்கப் பிரகடனத்தின்படி-

✱ இதுவரை நடந்த சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது.

✱ அவரது அரசு எதிர்பார்க்கும் விடயங்களை அடக்கக்கூடியதாக யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தியமைக்கப்படும்.

✱ மூடிய இரு தரப்புப்பேச்சு என்பதற்குப் பதிலாக வெளிப்படையாக பல தரப்புப் பேச்சாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

✱ சமாதானப் பேச்சுகளின்போது முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

✱ எந்தத் தீர்வும் நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்தான் காணப்படும்.

✱ தனி ஓர் இனத்துக்கு நாட்டுக்குள் தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன உண்டு என்ற எண்ணக்கருவுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

✱ இடைக்கால ஏற்பாடு குறித்துப் பேசலாம்; ஆராயலாம். ஆனால், அது இறுதித் தீர்வின் அங்கமாகவே இருக்கவேண்டும்.

- இவை அவரது கொள்கை விளக்கப் பிரகடனத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்களாகும்.

கடந்த 19ஆம் திகதி பதவியேற்றபோது நடத்திய உரையிலும், நேற்றைய கொள்கைப் பிரகடனத்திலும் ஜனாதிபதி சமாதான முயற்சிகளின் நோர்வேயின் பங்களிப்புக் குறித்துப் பிரஸ்தாபிக்கவேயில்லை.

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் ஆறாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை சம்பிரதாயப்பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஐந்தாவது ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ நேற்று முதன்முதலாக நாடாளுமன்றத்திற்கு வருகைதந்தார்.

இதனையொட்டி கோட்டே ஸ்ரீ ஜயவர்தன புர வீதியிலிருந்து நாடாளுமன்றம் வரை இராணுவத்தினரும், பொலீஸாரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியி ருந்தனர்.

முதலில் நேற்றுக்காலை 9.55 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார பாரியார் சகிதம் வருகைதந்தார். சபாநாயகர் தம்பதிகளை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வரவேற்றார்.

தொடர்ந்து 10 மணிக்குப் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவும் அவரது பாரியாரும் வருகை தந்தனர்.

இவர்களை சபாநாயகரும், நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் வரவேற்றனர்.

சரியாக 10.05 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாரியாரும் வருகை தந்தனர்.

ஜனாதிபதியையும், துணைவியாரையும் சபாநாயகர், பிரதமர், அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா, எதிர்க்கட்சிக் கொரடாவான மஹிந்த சமரசிங்க, குழுக்களின் பிரதித் தலை வர் சச்சிதானந்தன் ஆகியோர் வரவேற்றனர். செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

இவ்வேளையில் முப்படையினரின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் படையினரின் விசேட அணிவகுப்பு மரியாதை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. பின்னர் ஜனாதிபதியின் வருகையை கெளரவிக்கும் வகையில் 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

படையினரின் அணிவகுப்பு மரியாதையின் பின் மங்கள பேரிகை முழங்க தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

இந்தச் சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகளின் பின் ஜனாதிபதி படைகல சேவிதர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம், சபாநாய கர் ஆகியோரால் நாடாளுமன்றத்தின் சபா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

பின்னர் சம்பிரதாயபூர்வமாக ஆறாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பிப்பதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை நாடாளுமன்ற செயலாளர் சபையில் வாசித்தார்.

ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய அரசின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்.

நேற்றைய அமர்வின்போது ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீல.மு.காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி., இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி என்பனவற்றின் உறுப்பினர்கள் வருகை தந்தி ருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிறிது நேரம் சபையில் இருந்துவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண் டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் நாட்டில் இல்லாததால் நேற்று நாடாளுமன்றத்திற்கு வருகை தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

## தேசிய சின்ன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ தேசியத்தை வெளிப்படுத்தும் வகையில் தாயகத்தின் பூர்வீகத் தன்மை கொண்டதாக இந்தத் தேசிய சின்னங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன என்று தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பிட்டுள்ளனர். (12)

## மின்சாரம் தாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நிகழ்வொன்றுக்கு ஒலிபெருக்கியை மின்கம்பத்தில் கட்டிக்கொண்டிருக்கும் போதே அவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

மின்சாரம் தாக்கியதில் தூக்கிவீசப்பட்ட இவர் தரையில் வீழ்ந்து தலையிலும் முதுகுப் புறத்திலும் காயமடைந்தார்.

இச்சம்பவத்தையடுத்து அங்கு நின்ற பொதுமக்களின் உதவியுடன் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

(ஒ-17-154-203)

## மட்டக்களப்பில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, கோறாவெளி என்ற இடத்தில் இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் லொறி உரிமையாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7 மணியளவில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வினாசித்தம்பி கந்தசாமி (வயது -46) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டவராவார். இவரது வீட்டில் வைத்தே இவர் சுடப்பட்டார்.கொலையாளிகள் தப்பிச் சென்று விட்டனர். (ஒ-12)

# மாவீரர் தினம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர்தூவி அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இந்த ஆண்டிற்கான மாவீரர்தின உரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெறவுள்ளது.

விடுதலைப்போராட்டத்தில் உயிர்நீத்த புலிகள் இயக்கப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை மாலை 6.35க்கு வன்னியில் வைத்து ஈகச்சுடரினை பிரபாகரன் ஏற்றுவார். அப்போது மணிகள் ஒலிக்கப்படும்.தனது மாவீரர்தின உரையையும் அவர் நிகழ்த்தவுள்ளார்.

அது சமகாலத்தில் உள்ளூரிலும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் ஒலி, ஒளிபரப்பப்படுகின்றது.

இலங்கையின் புதிய அரசியல் சூழ்நிலைகளில் பிரபாகரனின் மாவீரர் தின உரை உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலுமிருந்து ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, குடாநாட்டில் மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்தின எழுச்சி நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

வடமராட்சி எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற மாவீரர்தின ஆரம்பநிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் கப்டன் இதயனின் தந்தை எஸ்.சின்னத்துரையும், மாவீரர் லெப். கஸ்தூரியின் தந்தை கந்தசாமியும் தேசியக் கொடியை ஏற்றினர். முதற் கரும்புலி மாவீரர் மில்லரின் திருவுருவப்படத் திற்கு வீர வேங்கை அகவன்புவின் சகோதரி செ.மயூரி மலர்மாலை அணிவித்தார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று காலை 9 மணிக்கு மாவீரர்தின ஆரம்ப நிகழ்வுகள் கோப்பாய் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரை மாவீரர் லெப்டினன்ட் சந்தியாவின் தாயார் திருமதி சி.நீட்டம்மாவும், தமிழீழத் தேசியக் கொடியை மாவீ ரர் கப்டன் பிரபாவின் தந்தை மா.திருநீல கண்டனும் ஏற்றினர்.

ஈகச்சுடரை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் இ.சந்திரன், அருட்தந்தை இ.இராஜ்குமார் மெளலவி கனிபா அலாவுதீன் உட்பட பலர் ஏற்றினர். நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் நிகழ்த்தினார்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று காலை 8 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை உடுத் துறை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் புவனச்சந்திரனும் தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசனும் ஏற்றினர்.

ஈகச்சுடரை மாவீரர் ஒருவரின் சகோதரி சன்ரிகா ஏற்றினார்.

தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தில் மன்னார்கோட்ட கண்காணிப்பாளர் போராளி க.கண்ணாளன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் பொதுச்சுடரை தமிழீழ காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் போராளி தே.கானகனும் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசனும் ஏற்றினர்.

ஈகச்சுடரை தமிழீழ காவல்துறை நடுவப் பணிகள் கண்காணிப்பாளர் போராளி சி.மாத வன் ஏற்றினார்.

தொடர்ந்து மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரை என்பன இடம்பெற்றன.

(ஒ-11-17-70-75-86-135-173-180-182-204)

# சிங்களத் தேசியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

சிங்களத் தேசியத்தின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவருடைய கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்.

அதேவேளை, எங்கள் தமிழ்த் தேசியத்தின் தேசியத் தலைவர் நாளை அவருடைய கொள்கைப்பிரகடனத்தை வெளியிடப்போகின்றார்.

இந்த உரை மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

இன்று நாட்டுமக்களுக்குத் தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்ட ஜனாதிபதி சமாதானப் பேச்சுகளுக்கும் புலிகளை அழைப்பார், அதிகாரப் பகிர்வு மூலமாகத் தீர்வு காண்பார் என எதிர்பார்த்தோம்.

ஆனால், ஜனாதிபதியின் உரை மூலம் உண்மையான சமாதானத்தின் கதவுகள் மூடப்பட்டுள்ளன.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

இந்த அரசு ஈ.பி.டி.பி.யினரை நம்பி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகவே முடியும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றீர்கள். ஆனால், தமிழர் களைக் கொலை செய்துவிட்டு இனம் தெரியாத நபர்களால் செய்யப்பட்டது என்று மூடிமறைத்துவிடுகிறீர்கள்.

அதேபோன்று இப்பொழுது அவசர காலச் சட்டத்தை நீடிக்க முனைகின்றீர்கள். அவசர காலச்சட்டம் இருந்தும் என்ன இல்லாவிட் டாலும் என்ன. எதுவுமே நடக்கப்போவதில்லை.

இதுவரை நீங்கள் அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழ்மக்கள்மீது ஆக்கிர மிப்பை மேற்கொண்ட தால் உங்கள் வசம் இருந்த நிலப்பரப்பை புலிகளிடம் தாரை வார்த்து விட்டது ஒன்றுதான் இங்கு ஒப் பேறியது.

அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும். இல்லையேல் நாடு நிரந்தரமாகவே இரண் டாகப் பிரிவதை எவராலும் தடுக்க முடியாது - என்றும் சிவாஜிலிங்கம் எம்.பி. கூறினார். (ஒ-க)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி யோகாம்பிகை இராஜகோபால்
அவர்களினது பாசமிகு தாய்

**திருமதி இராசமணி தங்கராசா**

அவர்கள் நேற்று (25.11.2005) வெள்ளிக்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து,அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வடமத்திய மகளிர் கல்லூரி,வதிரி, கரவெட்டி. பாடசாலைச் சமூகம்.
(சி-46406)(11-34)

SKY COMPUTER SYSTEMS.
89A, Kandy Road, Jaffna.
Tel: 021 222 9109
E-Mail: skymathy@sltnet.lk
Pentium II 400 MHZ- 16,000/-
Pentium IV Genuine intel Dealer Pentium III
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
17" Monitor - 7,900/-
அனைத்துக் கணனிகளும் 1 வருட உத்தரவாதம்
MOBILE SERVICE
(யாழ் கச்சேரிக்கு அருகில்)

புதிய ஆண்டில் கணக்கியல் உலகில் கால்பதிக்க தயாராகி விட்டீர்களா?
புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat Chartered Accountancy
100 % Free
aat Fundation கற்கை நெறிகளில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் அனைவருக்கும் விரிவுரைக் கட்டணம் முற்றிலும் இலவசம். 18.12.2005 வரை புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
IPAS
199, Main Street, Jaffna.
Tel :0777-563294
0777- 270452
OFFICE HOURS
Mon,Wed, Fri, Sat & Sun 9.00 am - 12.00 pm
(C/46396)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.